தென்மொழி



நடிப்பார் ஆட்சியுள்
நானிருந் தேனே !

ஐந்து பொறிகளும்
  அற்றுளம் செத்தும்,
பிய்ந்த பெருமைகள்
  பீற்றித் திரிந்தும்,
உய்ந்த பிழைப்பொடும்
  உய்யா வாழ்வொடும்,
நைந்த தமிழரொடு
  நானிருந் தேனே !

படிப்பார் அறிவெலாம்,
  பாழாய்ப் போகவும்,
இடிப்பார் கருத்துரை
  இழிவுரை யாகவும்,
துடிப்பார் உள்ளம்
  துவண்டுசோர் வுறவும்,
நடிப்பார் ஆட்சியுள்
  நானிருந் தேனே !

சுவடி : 23
ஓலை : 12

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உருபா: 1-75

நமக்கு வந்த மடல்கள்.

O: 1258: அன்புடையீர், வணக்கம். நலம். நலம் சூழட்டும்; வளம்பெருகட்டும். தங்களிடமிருந்து புறப்படும் மூன்று இதழ்களும் மனநிறைவை அளிக்கக் கூடிவாக இல்லை ஏன்? என்னுயிற்று? இருபது ஆண்டுகளுக்கு முந்திய நிலையில் காணப்பட்ட செப்பம் எங்கே? இந்தியப் பொருளியல் புரட்சியைப் பற்றி எழுதினுல் தமிழின மக்களுக்குச் சோறு கிடைத்து விடுமா? இந்தியா தமிழர்களைக் குறித்துக் கவலைப் படுகிறதா?

ஈழத்தமிழர்களைப் பற்றி எழுத வேண்டிய நேரத்தில் வேறு ஏதேதோ தொடர்பில்லாதவற்றைப் பற்றிக் கருத்துகள் வழங்குகிறீர்கள்! உரோம் நகரம் எரிந்தபோது, யாழ் மீட்டிய கதையாக உள்ளது. எண்ணற்ற இடர்ப்பாடுகளை ஏற்றுவிட்ட தாங்கள், ஏன் தயங்குகிறீர்கள்? மயங்குகிறீர்கள்? தொழில் நுட்பப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் **வா. செ. குழந்தைசாமி** அவர்களின் **'அறிவியல் தமிழ்'** நூல் குறித்துத், **''தின மணி''** நாளேடு, ஓரிரு கட்டுரைகளை வெளியிட்டு விட்டு, உருபா 10,000/- தட்டிக் கொண்டு போய் விட்ட பின்னர் அதனைக் குறித்து எழுதி யாது பயன் பெறப் போகின்றீர்? அறிவியல் தமிழ் குறித்து, ஐயா **அருளி** அவர்களின் கருத்துகள்தாம் முடிபானவை என்பது தாங்கள் அறியாததா? யான் குறைகள் காண்பதாகக் குறைத்து மதிப்பிடாதீர்கள்! தங்கள்பால் உள்ள அன்பாலும் உரிமையாலும் எம் உள்ளத்து உணர்வுகளை எழுதுகிறேன்! பிற ஏடுகளில் வரும் ஈழத்துச் செய்திகளையாவது நம் ஏடுகளில் எடுத்துப் போடுங்கள். என்றும் எம் அன்பும் துணையும் உண்டு.

அன்பன், — **கணியன்**, புதுவை.

O: 1259: பேராசான் பெருஞ்சித்திரனுர்! தமிழர்களின் விடுதலைக்குக் குரல் கொடுக்கும் ஓர் ஆசான்? இன்று தமிழகத்தில் அவருடைய கருத்தை ஏற்றுக் கொள்ளும் நிலை தலைவர் சிலர்க்கு வந்து கொண்டிருக்கிறது. அருஞ் செயல் வீரர் நேர்மையின் பிறப்பிடம், உள்ளத்தில் தூய்மை! தமிழ் விடுதலையை எதிர்ப்பவர்க்கு அவர் என்றும் எதிரி! அவர் சொல்லெடுத்து வீசினுல் மற்றவர்கள் தூசு! சொல்லுக்குச் சொல், எழுத்துக்கு எழுத்து பேச்சுக்குப் பேச்சு, அவரின் தமிழ் விடுதலைக் கொள்கை அவரின் உயிரின் மூச்சு! வாழ்க பெருஞ்சித்திரனுர் ஐயா!

— **வே. புகழேந்தி**, சென்னை-19

O: 1260: பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அய்யா அவர்களுக்கு வணக்கம்! பொருளியல் மாற்றம் பற்றி உண்மை நோக்கின்பால் அமைந்த சிந்தனைத் தெளிவைப் படித்திட முடிந்தது. மதவெறியால் இன்றைக்கு எத்தனை இடர்பாடுகளைக் குமுகாயம் பெற்றுத் துயர்கொண்டுள்ளது. மக்கள் அறியாமையின் உணர்விலல்லவா ஆட்பட்டுக் கிடக்கிறுர்கள், தன்னை உணர்ந்த நிலையில்லாது. தன் இனம் உணர்ந்த நிலை பெறுகிற ஏற்றம் கொள்ளும் போது விழிப்புணர்விற்கு ஆட்பட வேண்டியதாகிறது.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல் களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடி யாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடு பட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:மா.பூங்குன்றன்.க.மு. (தொலைபேசி : 847829

சுவடி 23] ௨0௧௮ துலை-நளி (-திச.'87சன'88) [ஓலை 1?

தமிழகத்தின் இருண்ட சூழ்நிலை மறைந்தது!

ம. கோ. இரா. (எம். ஜி. ஆர்) மறைந்தார்! தமிழகத்தின் இருண்ட சூழ்நிலை மறைந்தது. ஆம்! அறிவார்ந்த நிலையில், தமிழின நலம் கருதும் உண்மையான நோக்குடனும் நடுநிலையான பார்வையுடனும், சிறிதும் விருப்பு வெறுப்பற்ற மனவுணர்வுடனும் கூறினால், தமிழகத்தின் மேல் கடந்த பத்தாண்டுகளாகப் போர்த்திருந்த இருண்ட சூழ்நிலை, ம. கோ. இரா. வின் மறைவால் மறைந்தது என்றே சொல்ல வேண்டும்.

ஒன்றுமறியா ஏழைப் பொதுமக்களை மயக்கி, அரசியல் நாடக மாடிக் கொண்டிருந்த பெரிய எத்தர், ஏமாற்றுக்காரர், தம் நாடகப் புனைவைக் கலைத்து விட்டுக் காலத்திரையுள் தம்மை மறைத்துக் கொண்டார். இப்படி நாம் எழுதத் துணியும் போது, (ஆம், இதைப் பெரிய துணிவு என்று தான் கூறுதல் வேண்டும்.) அவருக்காகத் துணைநின்ற அரசியல் தகிடுதத்தக் காரர்களையும், அவரின் திடீர் மறைவால் துடிதுடித்துக் கண்ணீர் வடித்த, பல இலக்கக் கணக்கான ஏழை மக்களையும் எண்ணிக் கொண்டுதான், கூறுகிறோம்.

நம் நாட்டுப் பொதுமக்களை நினைக்கும் போது, ஒன்றை நாம் மறந்து விடக் கூடாது. அவர்கள் ஏழைகள். யாரினும் இரக்கப் பட வேண்டியவர்கள். ஒன்றும் அறியாதவர்கள். தமக்கு எது நன்மை பயக்கக் கூடியது எது தீமை பயக்கக் கூடியது என்று ஒன்றுமே அறியாத குழந்தைகளைப் போலும் விளக்கமற்ற மனத்தை

உடையவர்கள். அரசியல் பகட்டுக்காரர்களாலும், நடிப்புப் பட்டாம் பூச்சிகளாலும் அன்றாடம் ஏமாறி மதி மயங்கி நிற்பவர்கள். நீண்ட நெடிய காலம் அடிமைப் பட்டு அறியாமையில் மூழ்கியிருப்பவர்கள். அவர்களைத் தம் கரவான திரைப்படப் புனைவு நடிப்பால், போலித்தனமான பகட்டுப் பேச்சுகளால், அவர்களுக்கிடையில் ஒரு புரட்டுத் தனமான மாயையை உருவாக்கித் தம்மை நம்ப வைத்து, அந்த நம்பிக்கை யென்னும் மந்திரக் கருவியால் அவர்களை வேறெதைப் பற்றியும் சிந்திக்க விடாமல் தம் பக்கம் கவர்ந்து இழுத்துக் கொண்ட, ஆற்றல் மிகுந்த ஒரு மாயக்காரர் ம. கோ. இரா. மறைந்தது, மாந்தத் தன்மையில் மற்ற எல்லாரைப் போலவும் நமக்கும் ஆழ்ந்த வருத்தமேயானாலும், மக்களின் முன்னேற்ற வாய்ப்பைக் கருதுகையில், நமக்கு அளவிறந்த நம்பிக்கை கலந்த மகிழ்ச்சியே ஆகும். எல்லாருடைய கண்களிலும் வழிந்த கண்ணீரைப் போலவே அவர் மறைவால் நம் கண்களிலும் நீர் வழிந்தாலும், அதில் மகிழ்ச்சிக் கண்ணீரும் கலந்தே இருந்தது என்று சொல்வதில் நமக்கு அச்சமும் இல்லை ; தயக்கமும் இல்லை.

அரசியலைப் பொறுத்த வரையில் எந்த வகைத் திறமையுமே இல்லாதவர், அப்படி எதுவுமே தெரியாதவர், ம. கோ. இரா. ஒன்றுமே யறியாத, ஏழைப் பொது மக்களுக்குக் கூட, அவர்களின் நிலையான முன்னேற்றத்திற்கும் உயர்வுக்கும் ஏதும் செய்து விடாமல், அவ்வப்பொழுதைக்குச் சிறு சிறு நலம் பயக்கும் ஒரு சில கவர்ச்சித் திட்டங்களால், தம் வயப்படுத்திக் கொண்டவர் ம. கோ. இரா. ஏழைப் பொதுமக்களிடம் அவருக்கிருந்த ஈடுபாடெல்லாம் வெறும் திரைப்பட ஈடுபாடே ! அதனின் வலிவான தாக்கந்தான் அவரை அவர்கள் மனத்தில் தெய்வமாக உயர்த்திக் காட்ட உதவியது.

'வாரி வாரி வழங்கிய வள்ளல், பறங்கிமலைப் பாரி, கெடுத்துச் சிவந்த கை, பொன்மனச் செம்மல், அண்ணாவின் இதயக் கனி' என்றெல்லாம் அவர் போற்றிப் புகழப்படுவதெல்லாம், அவரைச் சுற்றியிருந்து, பொறுக்கித் தின்று, ஆதரவு காட்டிய ஒரு குறிப்பிட்ட கும்பலுக்கு அளித்த அரசியல் வாய்ப்புகளாலேயே! அவர்கள் ஒரு கணிசமான தொகையினரேனும், இவரால் நன்றாக வளர்ந்து கொழுத்துப் போகும் அளவிற்கு, அரசுப் பணத்தைப் பங்கு போட்டுக் கொண்டார்கள்

இவரை நெருங்கியவர்களுக்கெல்லாம் இவர் மறைமுகமாகவும் நேரிடையாகவும் பலவகையான பொருளுதவிகளையும் பதவிகளையும், பட்டங்களையும் தந்து, அவர்களை என்றும் தமக்கு ஆதரவாகவும், தம் புகழ்பாடும் ஒரு கூட்டமாகவும் ஆக்கிக் கொண்டார். இவருக்காக அவர்கள் பேசினார்கள்; பாடினார்கள்; இயங்கினார்கள் ; செயல்பட்டார்கள். பாராட்டுப் பேசுபவர்கள், சீராட்டிப் பாடுபவர்கள் நம் நாட்டில்—தமிழர்களிடையில் — அணி அணியாக இருக்கிறார்கள். அவர்கள் இதுபோலும் வாய்ப்புகளுக்

கென்றே ஆயத்தமாக வரிசையில் நின்று கொண்டு உள்ளார்கள். யாராவது ஒருவர் மற்றவர் ஒருவரை எதற்கோ ஒன்றுக்குப் பாராட்டத் தொடங்கி விட்டால் போதும். மளமளவென்று அவரைத் தொடர்ந்து, இவர்களும் தங்கள் கற்பனைகள், கருத்து வளங்கள் இவற்றைக் கலந்து, பாட்டோ பாட்டென்று பாடிப் பேச்சோ பேச்சென்று பேசித் தள்ளிவிடுவார்கள். இவர்கள் பாராட்டத் தொடங்கிவிட்டால் நிறுத்தத்தான் தெரியாது. அதற்கு ஆளும் இருக்காது. உலகத்தில் உள்ள இனங்களில் எல்லாம் மாந்தனை அளவுக்கு மீறிப் புகழ்வதும் இகழ்வதும், இந்தத் தமிழினத்துக்குத்தான் கைவந்த கலையாயிற்றே! ஒருவரைப் பாராட்டுவதென்றால், அது சரியோ, தவறோ, கண் மண் தெரியாமல், கால்மாடு தலைமாடு தெரியாமல் பாராட்டிப் புளுகித் தள்ளிவிடுவார்கள். 'பகலில் வந்த சந்திரனே, இரவில் வந்த சூரியனே'—என்றெல்லாம் பேசுகின்ற கற்பனையில் வல்லவர்கள். கற்பனை பண்ணிப் பண்ணியே காலமெல்லாம் போக்குபவர்கள் இவர்கள். இவர்களின் வாழ்வும் வரலாறும் வெறும் கற்பனையாகவே போய் விட்டன. அத்தகையவர்கள் எம். சி. ஆர். மறைவின் பொழுது பாராட்டியதில் வியப்பில்லை. இனி, ம.கோ.இரா. வாழ்ந்த பொழுது, தம்மை இழிவு படத் திட்டித் தம் கமுக்கமான செயல்களை அம்பலப் படுத்திய கண்ணதாசன் போன்றவர்களுக்கு இலக்கக் கணக்கில் பொருளுதவியும், பட்டம் பதவிகளும் தந்து, அவர்களின் வாய்களை அடைத்ததுடன், தம்மைப் போற்றியும் புகழ்ந்தும், எழுதவும் வைத்தார். அத்துடன் இவர் பற்றிய வரலாற்றை, இவருக்குச் சார்பாகக் கற்பித்தும், வனைந்தும் எழுதிய புலவர் சிலர்க்கு இலக்கக் கணக்கில் கொடுத்து அவர்களை ஊக்கியும் வந்தார். அவரைப் பாராட்டி வந்தவர்கள் சிலர் தங்கள் நிலையில் சிறிது மாறியதாகத் தெரியவந்த பொழுது, அவர்கள் தூக்கி எறியப் பட்டார்கள்; விலக்கப் பட்டார்கள்; கீழிறக்கப் பட்டார்கள்; அழிக்கப் பட்டார்கள். இவ்வகையில், நூற்றுக் கணக்கான திரைப்பட நடிகர்களையும், நடிகைகளையும், தொழில் நுணுக்கத் திறவோர்களையும், இவருக்குச் சார்பாக இல்லையென்ற காரணத்திற்காக அவர்களின் வளர்ச்சியைத் தடுத்தும் அவர்கள் வாழ்க்கையைக் கெடுத்தும் பழிவாங்கிய கொடுமை உள்ளங்கொண்டவர், அவர்.

இது மலிவான ஒரு நாலாந்தர, ஐந்தாந்தர அரசியல் தந்திரமே தவிர வேறு அன்று. இன்னுஞ் சொன்னால், இஃது அரசியலில் கரவான உத்தியும், வஞ்சகமான போக்கும், தந்நலமான நடைமுறையும், சூழ்ச்சியான திறமையும், நாடகத்தனமான ஆளுமையும் கொண்டது. இவ் வழிமுறைகளுக்கெல்லாம் நடுவண ரசை இவர் துணையாகவும், வழிகாட்டியாகவும் பயன்படுத்திக் கொண்டார். அதற்குக் கைம்மாறாக இவர் தமிழினத்தையே அவர்களிடம் அடகு வைத்தார்; காட்டிக் கொடுத்தார்; வஞ்சித்தார்.

இவரின் நடைமுறைகளையெல்லாம் தமிழினத்தை நிலையான அடிமைத்தனத்தில் வைத்திருக்கவும், அதைச் சிறிதும் முன்னேறாதபடி செய்யவும், உரிமை உணர்வு பெறாமல் மழுங்கடிக்கவும் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டது நடுவணரசு. அதுவும் குறிப்பாக, மறைந்த இந்திராவும், இராசீவும் இவரை, இந்த வகையில், சுக்கிரீவனாகவும், வீடணனாகவும் மிகவும் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அதற்கு ஈடாக இவர் திருவிளையாடல்களுக்கும் நடிப்புக்கும் ஒத்துழைப்புக் கொடுத்து, வானுயர்ந்த விளம்பரங்களினால், இவரைப் பெரியாரினும், அண்ணாத்துரையினும் மேலுக்கு உயர்த்திப் பிடித்தார்கள். இவரை நல்லவர், வல்லவர் திறமையானவர், ஏழை பங்காளர், மக்கள் நலம் கருதுபவர், நடுவணரசுடன் மோதிக் கொள்ளாதவர், ஒத்துழைப்பவர் என்றெல்லாம் பாராட்டித் தட்டிக் கொடுத்தார்கள், தமிழினப் பகைவர்களும், அவர் தம் அடிவருடிகளும்.

மற்றபடி இவரால் தமிழர்களும், தமிழினமும் ஒரு நன்மையும் பெற்றுவிடவில்லை. இவரால் ஏதோ ஒரு வகையில் தமிழினத்திற்குக் கிடைத்த தற்காலிக நன்மை பத்து விழுக்காடு என்று வைத்துக்கொண்டாலும், இவரால் கிடைத்த நிலையான தீமைகள் தொண்ணூறு விழுக்காடு ஆகும் என்பது தான் உண்மை ; நடுநிலையான கூற்று.

வஞ்சகமும் சூழ்ச்சியும் ஏமாற்றும் தந்திரமும் தந்நலமும் கொண்ட ஒருவரின் கையில் பணமும் பதவியும் அதிகாரமும் கிடைத்தால், என்னென்ன வகையில் அவர் தம்மைப் பொது மக்களிடையில், அவர்கள் தம்மை அடையாளம் கண்டு கொள்ள முடியாமல், தமக்கென ஒரு புகழ் மாயையை உருவாக்கிக் கொள்வாரோ, அப்படியப்படி யெல்லாம் இவர் நடந்து கொண்டதைத் தவிர, வேறு நிலையான மக்கள் முன்னேற்றத்திற்கு உதவுகின்றவாறு அரசியல் அறிவோ, பொருளியல் அறிவோ, பொதுநல மேம்பாட்டு உணர்வோ அவ்வகையான எண்ணமோ, உண்மையான மக்கள் அன்போ கொஞ்சங்கூட இல்லாதவர், இவர்.

திரைப்படங்களில் இவர் ஏழை பங்காளரைப் போலவும் பெண்களுக்குச் சமயத்தில் வந்து உதவும் நல்ல உள்ளம் படைத்தவராகவும், ஒழுக்க முடையவராகவும், தொழிலாளர்க்குதவும் தொழிலாளர் தலைவராகவும், நல்ல அரசியல் புரட்சியாளராகவும், பிற வகையில் மக்களைக் கவரும் கதை உறுப்பினராகவும், தம் விருப்பப்படி கதை, உரையாடல்கள், பாடல்கள் இவற்றை அமைத்துக் கொண்டு, அ'து அதற்கேற்ற வாறு தொழிலாளியாகவும், இழுவைவண்டி (ரிக்சா)க் காரனாகவும், மீனவனாகவும், ஆயிரத்தில் ஒருவனாகவும், நாடோடி மன்னனாகவும் தம்மைப் புனைவு செய்து கொண்டு, ஏழைப் பொது மக்களின் எல்லாத் தரத்தினரும் விரும்புமாறு நடித்தும் பாடிக் காட்டியும், எவ்வாறு பெரும் பெரும் படமுதலாளிகளின் பணத்தில், தமக்கொரு தலைமைத் தன்மையையும், தகுதியையும், பெருமையையும், புகழையும் ஏற்

படுத்திக் கொண்டாரோ அதுபோலவே அரசியல் பதவியையும் அதிகாரத்தையும் அரசுப் பணத்தையும் பயன்படுத்திக் கொண்டு, மக்கள் தம்மையொரு கடவுளாகக் கருதும்படி தம்மை உயர்த்திக் காட்டி, மக்கள் தலைவராகக் காட்டிக் கொண்டார். அரசியலால் பெற்ற பெருமைகளை விட, திரைப் படத்தால் கிடைத்த பெருமையே இவர் அரசியலுக்கு உதவியது.

மேலும், பொது மக்களைக் கவர, மறைந்த இந்திராவும் இராசீவும் கடைப்பிடித்த, கவர்ச்சி வழிகளையே இவரும் கடைப்பிடித்து வந்தது, அவர்களின் அரசியல் தில்லுமல்லுகளுக்கு வசதியாகவும் வாய்ப்பாகவும் இருந்தது. அதனாலேயே, இந்திராவின் மறைவின் பொழுது, அவரால் தனிப்பட்ட முறையில் நன்மை பெற்ற கொள்ளைக்கூட்டம் எவ்வாறு அவரை வானளாவப் புகழ்ந்து தள்ளியதோ, அவ்வாறே, இவரின் மறைவின் பொழுது, இவரால் தனிப்பட்ட முறையில் நன்மை பெற்ற கொள்ளைக்கூட்டமும் இவரையும் புகழ்ந்து தள்ளியது. இவ் விருவர் மறைவின் பொழுதும் வானொலியும் தொலைக் காட்சியும் நன்கு பயன்படுத்திக்கொள்ளப் பெற்றன. வட நாட்டுத் தலைவர்களிடமும், தில்லி அரசிடமும் நயமாக நடந்து, இனத்தைக் காட்டிக் கொடுக்கும் முயற்சியைச் செய்து அவர்களின் ஆதரவைப் பெற்றால், எவரும் இவர் பெற்ற பெருமையையும் ஊதியத்தையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதற்குத் தேவையான சான்றாகவே இவர் இருந்தார் என்றால், அது தவறாகாது.

இவர் உயிருடன் இருந்த பொழுது இவர் பற்றிப் பேசப் பெறாத தனித் தன்மைகளெல்லாம், இவர் மறைந்த பின், வானொலியிலும், தொலைக் காட்சியிலும் பன்னிப் பன்னிப் பேசப் பெற்றன. 'இந்தியாவை ஆள்வதற்கு இந்திரா காந்தியே தகுதி வாய்ந்த தலைவர்' என்றும், 'எனவேதான் எம். சி. ஆர். அவருக்கு முழு ஆதரவைத் தந்தார்' என்றும், 'அவர் கொண்டு வந்த நெருக்கடி நிலையை வரவேற்றார்' என்றும், 'இந்திராவின் 20 வகை(அம்ச)த் திட்டத்தையும் ஆதரித்தவர் இவர்' என்றும்,

'முரட்டுத்தனமாக நடுவணரசை எதிர்ப்பதோ ஆதரிப்பதோ தேவையில்லை' என்பதும், 'இந்திய தேசிய நலனுக்கும் ஒருமைப் பாட்டுக்கும் மாறுபட்ட வகையில் எந்தமுயற்சியும் செய்ய வேண்டியதில்லை' என்பதும், எம். சி. ஆர். கொள்கை என்றும், வானொலியும், தொலைக் காட்சியும் தொண்டை வரள இரண்டு நாள்களும் இவரைப் பற்றிக் கத்திக் கொண்டிருந்தன. அவர் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லுகிற பொழுது கூட, 'புரட்சித் தலைவர், பொன் மனச் செம்மல் எம். சி. ஆர். அவர்கள் காங்கிரசுக்காரராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிக் கலைத்துறையில் ஈடுபட்டு வெற்றி கண்டு, பிறகு தமிழக முதல்வராகப் பத்து ஆண்டுகளுக்கு மேலாக இருந்து...'' என்றே தொடங்கிக் கதையளந்தார்கள்.

மற்றபடி இவர் தி. மு. க. வில் இருந்தது பற்றியோ, பெரியாருடனும் அண்ணாவுடனும், கலைஞருடனும் தொடர்பு வைத்தி

ருந்தது பற்றியோ மிகுதியாக ஒன்றும் அவர்கள் பேசிவிடவில்லை

இதிலிருந்து என்ன தெரிகிறது? எம். சி. ஆரை எந்த அள வில் உருவாக்கிப் பொதுமக்களிடத்தில் விளம்பரப் படுத்தினால், அது தில்லியாட்சிக்கு உதவும் என்று கணக்குப் போட்டு விளம் பரப் படுத்தியிருக்கிறார்கள் என்பதும், அதற்குத் தக்கவாறு இவ ரும் தம்மை வடிவப் படுத்திக் கொண்டு வாழ்ந்திருக்கிறார் என்ப தும் புலப்படவில்லையா?

இனி, 'முரட்டுத் தனமாக நடுவணரசை எதிர்ப்பதோ ஆத ரிப்பதோ தேவையில்லை' என்பதும், 'இந்திய தேசிய நலனுக்கு மாறுபட்ட வகையில் எந்த முயற்சியும் செய்ய வேண்டாம்' என்ப தும், எம். சி. ஆர் கொள்கை என்று சொல்லப் படுவதன் வழி, நடு வணரசுடன் மாறுபட்டிருக்கும் ஆந்திரா, கேரளா, கருநாடகா, பஞ்சாப், அரியானா, அசாம், நாகலாந்து, திரிபுரா, மேற்கு வங்கா ளம்—முதலிய மாநிலங்களுக்கு, ஓர் அறிவுறுத்தத்தையும், தங் களுடன் இணைந்து போனால் எந்த வகையான ஓர் உயர்வு, பெருமை கிடைக்கும் என்பதற்கான ஒரு விளம்பரக் கவர்ச்சியை யும், காட்டியுள்ளது, நடுவண் அரசு! அஃதாவது இராசீவ் அரசு!

'திராவிட உரிமைகளை மேம்படுத்திய பெரியாரையும் அண்ணா வையும் பெருமையில்—வரலாற்றில்—குறைத்துக் காட்ட வேண் டும் என்பதும், இவரை மிகுத்துக் காட்ட வேண்டும் என்பதும், அதன் வழி, அடுத்து வரும் தமிழினம் அவர்களைப் பின்பற்றாமல், எம். சி. ஆரையே பின்பற்றி அடிமைப்பட வேண்டும்' -என்பதும் நடுவணரசின் நோக்கம்; எதிர்பார்ப்பு. அந் நோக்கத்தை—எதிர் பார்ப்பை—எம். சி. ஆரின் மறைவை வைத்து நிறைவேற்றிக் கொண்டது இராசீவ் அரசு. இது, கலைஞரின் சிலையைக் கடுமை யான இவரின் மறைவுச் சூழலில் அடித்து வீழ்த்தியதைப் போன் றது.

தொலைக் காட்சியில், இவர் ஏழை மக்களின் நம்பிக்கைக் குரி யவர் என்று நம்ப வைப்பதற்காக, இவரைப் பற்றி ஏழை இழு வண்டித் தொழிலாளிகளிடமும், ஏழைப் பெண்கள் சிலரிடமும், நரிக்குறவர்கள் சிலரிடமும் நேருரை கண்டு, கருத்துக் கேட்டு, அவற்றை விளம்பரப் படுத்திய காட்சிகளில், அவ் வேழை மக்கள் பஞ்சையாயும் எண்ணெய் கூட இல்லாத பரந்த தலையினராயும் காட்சியளித்ததைப் பலர்கண்டு நினைவில் வைத்திருக்கலாம். இதுவே, இவர், அவர்களை எந்த வகையில் ஏமாற்றி, ஆண்டும், அவர்களின் உள்ளங்களில் அவர்கள் இவரைத் தெய்வம் என்று மதிக்கும் வகையில் ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தார்— என்பதை மெய்ப்பிக்கப் போதுமானது. இன்னும் அக் காட்சி களில், இவரைக் கடந்த 35 ஆண்டுகளாகத் தெரியும் என்றுகூறிய ஏழை வண்டித் தொழிலாளி ஒருவர், அன்றிருந்த படியே இன்றும் இருந்ததை அனைவருமே கவனித்திருக்கக் கூடும். மொத்தத்தில்

இவரை விரும்பி வரவேற்றவர்கள், அரசியல், பொருளியல் முன்னேற்றம் என்பதையே என்னவென்று அறியாத ஏழை எளிய மக்கள் என்பதை நன்கு உணர்த்தியது, அத்தொலைக்காட்சி நேருரை.

பைபிளில், ஏசுநாதர், தம்மை உணராமல் தீங்கு செய்தவர்களுக்காக வருந்தி, 'இறைவனே, இவர்கள் என்ன செய்வதென்று அறியாமல் செய்கின்றார்கள் ; இவர்களை மன்னியும்'' என்று வேண்டியதைப் போல், நாமும் அவ்வேழைகளுக்காக இரங்குவதைத் தவிர, செய்வது வேறொன்றும் இல்லை.

இவ்விடத்தில், இன்னொன்றையும் நாம் நன்றாக எண்ணிப் பார்த்தல் வேண்டும். இவர் ஏழை மக்களுக்காகப் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்ததாகக் கூறுகின்றனர் ; ஆரவாரப் படுத்துகின்றனர். சற்று ஆழமாகப் பார்த்தால் அவை யெல்லாம் அவர்களைத் தற்காலிகமாக மன நிறைவு செய்யும் திட்டங்களாகவே இருப்பதை உணரலாம். நண்பகல் இலவய உணவுத் திட்டம், குடிசை மாற்றுத் திட்டம், இலவயப் பல்பொடித் திட்டம், செருப்பு, உடை வழங்கு திட்டம், முதலிய திட்டங்களும்— உழவர்களுக்குக் கடன்கள் தள்ளுபடி செய்தது, இலவய மின்சாரம் வழங்கியது, இடையிடையே மழையாலும் வறட்சியாலும் தாக்குண்டவர்களுக்கு வேட்டி, சேலை,அரிசி முதலியவை வழங்கியது—ஆகியன எல்லாம் தற்காலிக நலன் பயக்கும் ஏமாற்றுத் திட்டங்களே, செய்திகளே ! இவற்றால் ஏழைகள் நிலையான முன்னேற்றம் அடைய வழியில்லை என்பது அனைவர்க்கும் தெரியும். எனவே, அவர்களை என்றென்றும் அடிமையாக வைத்திருக்க—சூழ்ச்சியாக முதலாளியம் கொள்கிற கரவான கோட்பாடுகளே இவை என்று கருதிக் கொள்க.

இனி, தம் புகழுக்காகவும் பெருமைக்காகவும் தமிழீழத்தின் விடுதலையையே—தமிழினத்தின் முன்னேற்றத்தையே ஒரு பெரும் சிக்கலில் மாட்ட வைத்தவர் ம. கோ. இரா. கீழே உள்ள செய்தியைக் கவனியுங்கள்.

''அவருடைய முழு ஒத்துழைப்பும் ஆதரவும் அரச தந்திரமும் திறமையும் இல்லையானால், இந்த இந்திய—இலங்கை ஒப்பந்தம் நடைபெற்றிருக்க முடியாது. அவருடைய அறிவாற்றல் பெரிது ; முயற்சி பெரிது ; பட்டறிவு பெரிது ; தேசியப் பற்று சிறந்தது. அவரே இந்த வெற்றிக்கு முழுக் காரணமானவர். எனவே அவருக்கே என் பாராட்டுகளும் நன்றியும் உரியனவாகும்... நான் யாரைப்பற்றிச் சொல்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா ? அவர்தாம் உங்கள் முதல் அமைச்சர் திரு. எம். சி. இராமச்சந்திரன்'—என்று, இந்திய இலங்கை வெற்றி விழாவில் இந்தியத் தலைமையமைச்சர் இராசீவ் தம் நன்றியுரையைக் கூறி, ம. கோ. இராவை வாயார வானளாவப் பாராட்டினார்.

இப் பாராட்டும் புகழ்ச்சியும் எதை உணர்த்துகிறது ! நாம் இந்தப் பாராட்டையும் புகழ்ச்சியையும் இராசீவிடமிருந்து பெறுவதற்காகத் தமிழீழத்தை இந்திய அரசுக்கு அடகும், இலங்கைக்கு விற்பனையும் செய்திருக்கிறோர் என்பதையே புலப்படுத்துகிறது, இல்லையா ? இதனால் வெளிப்படையாக ம. கோ. இரா. பெற்றது, பாராட்டும் புகழ்ச்சியும் என்றால் மறைமுகமாகப் பெற்றது என்னவோ, எவ்வளவோ ? அஃது இராசீவுக்கும் இராமச்சந்திரனுக்குமே வெளிச்சம்.

'இலங்கைப் போராட்டத்தில், நாம் தலையிடுவது பிறிதொன்றன் உள் நாட்டுச் சிக்கலில் தலையிடுவது போலாகும்.'—என்று தொடக்கத்திலிருந்து செயவர்த்தனே அரசு தன்னை வலுப் படுத்திக் கொள்ளும் வரை சொல்லிக் கொண்டே வந்து, இறுதியில் தமிழர்களின் கழுத்தை நெரிக்க இலங்கையுடன் கூட்டுச் சேர்ந்தது உலக வரலாற்றிலேயே பெரிய அரசியல் தந்திரமாகும் என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். இனி இதற்குப் பெரிதும் காரணமாக நின்றவரும், தமிழினத்தையே காட்டிக் கொடுத்தவரும் மறைந்த முதல்வர் ம. கோ. இராமச்சந்திரனே என்று அறியும் போது எவ்வளவு வருத்தமாக இருக்கிறது. இதனால், எம். சி. ஆர். பெற்றது என்ன ? தம் மறைவுக்குப் பின்னால் தமக்கேற்பட்ட பெருமை ! பெரும் விளம்பரம் ! நாடு முழுவதற்கும் ஒரு நாள் தேசிய அளவிலான விடுமுறை ! இரங்கல் !

ஆனால், கால வரலாற்றில் இவர் வரலாறு கறை படிந்தது ஆகி விட்டதே ! ஒருவன் எவ்வளவு புகழ் பெற்றான் என்பதன்று ; என்ன வகையாகப் பெற்றான் என்பதே முகாமையானது. எப்படியோ, தமிழகத்தைக் கவ்விக் கொண்டிருந்த இருண்ட சூழ்நிலை மறைந்து போயிற்று ! இனி, இதற்கு ஒளியேற்றுபவர் யாரோ ? பொறுத்திருந்துதான் பார்த்தல் வேண்டும் ! காலந்தான் அதற்கு விடை சொல்லும் !

○

(32-ஆம் பக்கத் தொடர்ச்சி)
பயன்படுத்திய பொருள்கள் எல்லாம் பாழாகி விட்டன...... நானே சிறுவனாக இருந்த போது அவரின் கல்லறையைப் பார்த்துள்ளேன்...இன்று அது போன இடம் தெரியவில்லை... இடுகாடு எல்லாம் வளமனைகளாகவும், குடிசைகளாகவும் மாறிவிட்டது. ...தி. மு. க. ஆட்சிக்குப் பின் இப்படிப்பட்ட நிலை வந்து விட்டது. நினைவில்லமும் பாழாகி விட்டது.' என்றார்.

அடிகளாரின் கல்லறையுடன் ஒரு வரலாற்றையே ஆட்சியாளர்கள் மறைத்து விட்டார்கள். பாழடைந்து மறைந்து கொண்டிருக்கும் நினைவில்லத்துடன் ஓர் இலக்கிய நூற்றாண்டையே மறைத்து அதில் கல்லறை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் அறிஞர்களின் அவலக் குரல், நெஞ்சக் குமுறல் அரசினர் தொளைக் காதுகளுக்குத்தான், கேட்குமா ? அதன் தமிழுணர்வற்ற 'கோளில்லாத பொறியில்லாத, குணமில்லாத, மரமண்டைக்குத் தான் உறைக்குமா ? பொறுத்திருந்து பார்ப்போம் !

—அடிப்படை, 'விசிட்டர் இலென்சு' (30.8-6.9.'87.)

பெருஞ்சித்திரனார் நேருரைகள்!

தென்மொழி இதழ்-ஒரு மதிப்பீடு 1972-76

(அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர் திரு. ஆ. மணவாளன், க. மு. அவர்களின் மெய். மு. (M.Phil) பட்ட ஆய்வுக்காக எடுக்கப் பெற்ற குறிப்புகள்.)

1. தென்மொழி இதழ் தோன்றுவதற்குரிய சூழல் யாது?

உயர்ந்த கோட்பாடுகள் சூழலால் உருவாவதில்லை. காலங்காலமாக உருவாகி வளர்ச்சி பெற்று வரும் மாந்த இனத்தின் தேர்ந்த நடை முறைகளே கோட்பாடுகளாக வடிவமைக்கப்பெறுகின்றன.

ஏனோ தெரியவில்லை, என் சிறிய அகவைப் பொழுதிலிருந்தே நம் தாய் மொழியாகிய தமிழ் மொழி மீது ஓர் அடங்காத பற்றும் ஆர்வமும் என் உள்ளத்தில் குடிகொண்டிருந்தன.

அகவை வளர வளரவும் என் பள்ளிப் பருவத்திலேயே அத் தமிழுணர்வு மிக ஆழமாகவும் அகலமாகவும் என் நெஞ்சில் கால் கொண்டு வேரூன்றத் தொடங்கின. இவை என் பள்ளிப் பருவத் தமிழாசிரியர்கள் திருவாளர்கள் வை. சுப்பிரமணியம், தமிழ் மறவர். வை. பொன்னம்பலனார், க. நடேச(உடையா)ர் முதலியோரால் நன்கு வளர்த்தெடுக்கப் பெற்றன. எனவே தமிழ் இலக்கிய இலக்கணங்களில் பெரிதும் என் ஆர்வம் வளரத் தொடங்கியது. நான் ஐந்தாம் வகுப்பு படிக்கும் போழுதே சிறு சிறு பாடல்கள், கட்டுரைகள், கதைகள் முதலியவற்றை எழுதத் தொடங்கினேன். ஆறும் வகுப்பில் 'குழந்தை' என்ற கையெழுத்துப் படியை என் வகுப்பு மாணவர்களிடையே உலா வர விட்டேன். எட்டாம் வகுப்பில் அவ்விதழ் 'மலர்க்காடு' என்ற பெயருடன் நடந்து வந்தது. அதில் என் இயற் பெயரான துரை. மாணிக்கம் என்பது 'அருணமணி' என்னும் புனைபெயரால் குறிக்கப் பெற்றது. என் உயர்நிலைப்பள்ளிக் கல்வி முடியும் வரை அவ்விதழ் மாதம் ஒரு முறை தொடர்ந்து நடந்து வந்தது. அவ்விதழில் பாடல்களும், கட்டுரைகளும், கதைகளும் என்னாலேயே பெரும்பாலும் எழுதப் பெற்று வந்தன. அவற்றுக்கான ஓவியங்களையும் நானே வரைந்தேன். சில நேரங்களில் என் ஓவிய ஆசிரியர் திரு. க. அரங்கசாமி அவர்களும் என் இதழில் அட்டைப்பட ஓவியங்களை வரைந்து கொடுப்பதுண்டு. இவ்வடிப்படைகள் இதழ் நடத்துகின்ற ஓர் ஆர்வத்தை என்னுள் வளர்த்தெடுத்தது.

என் பள்ளிப் பருவத்திலும் கல்லூரிக் காலத்திலும், பள்ளி, கல்லூரி ஆண்டு மலர்களில் நான் தொடர்ந்து பாடல்களையும், கட்டுரைகளையும், கதைகளையும் எழுதி வந்தேன். இவ்வகையில் என் எழுத்துப் பயிற்சியைப் பெருக்கிக் கொண்டேன்.

தொடக்கக் காலத்திலிருந்தே தமிழைத் தூய்மையாகப் பேச வேண்டும் எழுத வேண்டும் என்னும் என் ஆர்வத்தை நெய்யூற்றி

வளர்த்தவர்கள் பள்ளியில் என் தமிழ் ஆசிரியர் திரு. வை. பொன்னம்பலனார் அவர்களும், கல்லூரியில் என் மொழியாசான் திரு. ஞா. தேவநேயப் பாவாணரும் ஆவார்கள். கழக இலக்கியத்தில் பெரிதும் ஆர்வம் மூட்டியவர் திரு. வீ. உலக ஊழியர் என்னும் என் கல்லூரித் தமிழாசிரியர் ஆவார். என் கல்லூரித் தமிழாசிரியை திருவாட்டி காமாட்சி குமாரசாமி அவர்களுக்கும் என் தூய தமிழ்ப் பற்றை ஊக்குவித்த பெருமை உண்டு.

இவற்றுக்கிடையில் பாவேந்தர், பாரதிதாசனார் பாடல் நூல்களும், தந்தை பெரியார் அவர்களின் தன்மான இயக்கமும் என்னுள் தீவிரமான தூய தமிழ்ப்பற்றும் பகுத்தறிவும், அறிவியல் நோக்கும் வளரக் காரணமாயின. மறைத்திரு. மறைமலை அடிகள், பாவாணர் ஆகியோரின் நூல்கள் என் தூயதமிழ்ப் பற்றையும் அறிவையும் செப்பமாக வடிவமைத்துக் கொள்ளவும் அவற்றை ஒரு கொள்கை நோக்கில் கொண்டு செல்லவும் அடிப்படைக் காரணங்களாக அமைந்தன.

எனவே தூயதமிழ் அஃதாவது தனித்தமிழ்க் கொள்கையை மேலும் மக்களிடைப் பரவலாகக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்னும் உறுதி ஏற்பட்டது. அத்துடன் மொழி அடிப்படையில் இனவுணர்வைக் கிளர்ந்தெழச் செய்யவும், இன முன்னேற்ற அடிப்படையில் சாதி, மதமற்றச் சமநிலைக் குமுகாயத்தைக் கட்டமைக்கவும், அதன் அடிப்படையில் விடுதலை பெற்ற—அடிமை நிலை தவிர்த்த தமிழ் நாட்டை மீட்டெடுக்கவும், திட்டமிட்டு, இக் கொள்கைகளைக் கருத்தளவில் முதலில் பரப்ப எண்ணங்கொண்டு, அவற்றிற்கென ஓர் இதழைத் தொடங்குவது இன்றியமையாத தேவையாக எனக்குப் பட்டது.

மேலும், நம் அருந்தமிழ் மொழியானது, மிகவும் கலப்புற்ற நிலையில் பிழைபாடாக நம் மக்களிடையில் வழங்கவும், நம் நாட்டுச் செய்தித்தாள்கள் இதழ்கள் முதலியவற்றில் எழுதவும் ஆன ஓர் இழிநிலை இருந்து வந்தது ; வருகிறது. இந்த நிலைகளையும் படிப்படியாக மாற்றுவதற்கு ஒரு தூய தமிழ் முயற்சி தேவைப் பட்டது.

எனவே மொழியின் பெயரால் ‘தென்மொழி’ எனும் ஓர் இதழை அப்பொழுதிருந்த பொருள்நிலைக் கேற்ப, 1959-ஆம் ஆண்டு இறுதியில் நெல்லிக்குப்பத்தில் 25 காசு விலையில் மாத வெளியீடாகத் தொடங்கினேன்.

2. தாங்கள் வெளியிட்ட மொத்த நூல்கள் எத்தனை ? ஏதேனும் பரிசு பெற்றதுண்டா ?

நான் எழுதி இதுவரை வெளிவந்துள்ள நூல்கள் இருபத்தைந்து. இன்னும் அச்சேறுத நூல்கள் நிறையவுண்டு. அவற்றுள் எதுவும் இதுவரை பரிசு பெற்றதில்லை. காரணம் நான் ஒன்றையும் பரிசுக்கு அனுப்புவதில்லை. அன்பர்கள் வற்புறுத்தி ‘ஐயை’ எனும் சிறுபாவிய நூலை ஒருமுறை அண்ணாமலையார் நினைவுப் பரி

சுக்கு' அனுப்பி வைத்தனர். ஆனால் அறிவறிந்து போற்றப்பெறாத நம் நாட்டு நிலையால் அவ்வினிய அரிய தூயதமிழ்ப் பாவியமும் பரிசு பெறவில்லை.

மற்று, இந்நூல்களுள் ஐயை, கொய்யாக்கனி ஆகிய இரண்டு நூல்களும் பல்கலைக் கழகங்களால் இளங்கலை, (B.A.) முதுகலை (M.A.) ஆகிய வகுப்புகளுக்குப் பாடநூல்களாக வைக்கப் பெற்றுள்ளன.

3. தங்கள் இதழ் பிற இதழ்களிலிருந்து எவ்வாறு வேறு படுகின்றது ?

1. பிற இதழ்கள் கலப்புத்தமிழில் வெளிவந்து கொண்டிருக்கையில், இது தூய தனித்தமிழில் வெளி வந்து கொண்டிருப்பது.

2. இதில் விளம்பரங்களே வெளியிடப் பெறுவதில்லை.

3. இதில் மக்களை மனமயக்கத்திற்குள்ளாக்கி, அருவருப் புணர்ச்சியை வளர்க்கும் கவர்ச்சி உத்திகள் கையாளப் பெறுவதில்லை.

4. இது, தூயதமிழ், இனநலம், நாட்டு விடுதலை ஆகிய மூன்று கொள்கைகளையும் தீவிரமாகச் செயற் படுத்துவதற்கென்றே தொடங்கப் பெற்று நடந்து வருகின்றன.

5. தூய தமிழில் 5, 000 படிகள் வரை அச்சிட்டு வெளியிடப் பெற்ற இதழ் தென்மொழியைத் தவிர வேறு எதுவும் இல்லை.

6. ஒவ்வோரிதழிலும் அதன் முகப்பிலும் சிறந்த கொள்கைப் பாடல் ஒன்று வெளியிடப் பெறுகின்றது.

7. இக்கால அச்சு விலையேற்ற நிலையிலும் பொருள் வருவாய் கருதப் பெறாமல் குறைந்த விலைக்கு விலைக்கு விற்கப்பெறுகிறது.

8. தென்மொழி என்றென்றும் போற்றிப் பாதுகாக்கப் பெறும் இதழாக இருக்கிறது. பிற இதழ்களில் ஒன்று இரண்டைத் தவிர வேறு இதழ்கள் இத் தகுதியைப் பெறவில்லை,

9. இவ்விதழைத் தொடர்ந்து படித்தவர்கள், நல்ல அறிஞர்களாகவும், நன்கு தமிழ் கற்றவர்களாகவும், சிறந்த பொதுமை உணர்வு கொண்டவர்களாகவும், இனவுணர்வு, மொழியுணர்வு, நாட்டுணர்வு உள்ளவர்களாகவும் உள்ளனர்.

10. ஒவ்வொரு மாதமும் பேரிழப்பு உற்றும், அன்பர்களின் நன்கொடையாலும், ஆசிரியரின் சொற்பொழிவு, நூல்விற்பனை வருவாய்களைக் கொண்டும், கடந்த இருபத்தேழு ஆண்டுகளாக நடத்தப் பெறும் தென்மொழி, இருபத்தோர் ஆண்டுகளாக வெளி வரும் தமிழ்ச்சிட்டு, நான்கு ஆண்டுகளாக வெளி வந்து கொண்டிருக்கும் தமிழ்நிலம் போலும் இதழ்கள் உலகில் வேறு எங்கும் எவராலும் நடத்தப் பெறவில்லை.

4. தாங்கள் பதிப்புத் துறையில் கையாளும் உத்தி யாது ?

1. இதழைப் பிழையின்றி அச்சிடுவது;

2. தூய தமிழில் அச்சிடுவது.

3. அழகிய அச்சு எழுத்துகள்.
4. படிப்பதற்கு ஏற்ற அச்சு அமைப்பு. —முதலியவை.

5. காலத்திற்கு ஏற்ப தாங்களின் இதழ அமைப்பு மாருதது ஏன் ?

இது நிகழ் காலத்தை வென்று எதிர்காலத்தை உருவாக்கும் நோக்கத்துடன் நடத்தப் பெறுவதால், காலச் சுழற்சியில் இது சிக்கிக் கொள்ளவில்லை.

மேலும், கருத்து நிலையில் இஃது, இன்றைய அறிவியல், வாழ்வியல் நிலைகளுக் கேற்ப, இது தமிழிலும் பலவகையான புதுமைக் கொள்கைகளையும், பொதுமை உணர்வையும் கடைப்பிடித்தே வருகிறது.

கவர்ச்சி உத்திகளான அருவருப்பு ஓவியம், பாலியல் கருத்துகள் முதலியவை பெருகி வரும், பரக்கக் கடைப்பிடித்து வரும் இதழ்களுக்கு நடுவில், இவ்விதழ் அத்தகைய போலித்தன்மையும் புன்மை நிலைகளையும் கடைப்பிடிக்காமல், மக்களின் மன நலம், அறிவு நலம், வாழ்வியல் நலம் ஆகியவற்றையே தொடர்ந்து கடைப்பிடித்து வருவது ஒரு குறைபாடன்று ; மாருக சிறந்த ஒரு நிறைபாடே !

6. சில சமயம் இரண்டு அல்லது மூன்று மாத இடைவெளிக்குப் பின் இதழ் வெளிவருவதேன் ?

போதிய பொருளின்மை, போதிய ஆட்கள் இன்மை, அச்சகத்தில் போதிய தொழிலாளர் இன்மை, ஒரு சிறிய அச்சுப்பொறியும், குறைவான எழுத்துகளும், இரண்டு, மூன்று தொழிலாளர்களையும் கொண்டே இயங்குவது, விற்பனைத் தொல்லைகள், கடன்பட்டு இதழ் நடத்த வேண்டியிருப்பது, ஆசிரியரின் சொற்பொழிவுக் கென அமையும் வெளியூர்ச் செலவுகள்—ஆகிய பல காரணங்களாலும், நாம் ஒருவரே தொடர்ந்து மூன்று இதழ்களை மூன்று ஆக்கக் காரணங்களுக்காக வெளியிட வேண்டியிருப்பதாலுமே, சில சமயங்களில் இரண்டு மூன்று மாத கால இடைவெளிகள் தவிர்க்க முடியாமல் போகின்றன. அவ்வாறு வெளிவரினும் உறுப்பினர்கள் ஆண்டு ஒப்பத்திற்குப் பன்னிரண்டு இதழ்கள் சரியாகக் கணக்கிட்டு அனுப்பப் பெறுகின்றன.

இக்காலத்தாழ்த்தம் தொடர்பாகத் தென்மொழியிலேயே இதன் வெளியீட்டு அரு முயற்சிகளைப் பற்றிக் கீழ்வருமாறு இரண்டு எடுத்துக் காட்டுகளைக் கொடுத்திருக்கின்றேன்.

1. இருட்டு வேளையில், கரட்டுப் பாதையில், அச்சு முறிந்த வண்டியில், முரட்டுக் காளைகளைப் பூட்டித் திருட்டுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வெருட்டு வெருட்டு என்று வெருட்டிக் கொண்டு போவது போலவும் ;

2. ஓடிக் கொண்டிருக்கும் ஓட்டை வண்டியில் ஆடிக் கொண

டிருக்கும் இருக்கையில் அமர்ந்து, ஒழுகிக் கொண்டிருக்கும் தூவலால் எழுதிக் கொண்டு போவது போலவும் ;

—இருக்கின்றது, இத் தென்மொழி இதழ் நடத்துகின்ற முயற்சி !

எனவே பல நிலைகளிலும் தொய்வுகள் இருக்கவே செய்யும், என்பது இழிவன்று ; சிறப்பே !

7. இதழில் கதைகள், விளம்பரங்கள், துணுக்குகள் இடம் பெறுவது ஏன் ?

விளம்பரங்களைப் பொறுத்தமட்டில், நாங்கள் அவற்றைத் தேடிப் போவதில்லை. தாமாகவே இது போலும் இதழ்களில் விளம்பரம் கொடுக்கவும் எவரும் முன்வருவதில்லை. அவ்வாறு கொடுத்தாலும் தூய தமிழ் விளம்பரங்களையே நாங்கள் ஏற்றுக் கொள்ள இயலும். இக் காரணங்களுக்காக இதழில் விளம்பரங்கள் வருவது அறவே இல்லை. இதழ் தொடங்கிய இவ்விருபத்தேழு ஆண்டுகளில் நான்கைந்து விளம்பரங்களே வெளிவந்திருக்கும் என்று கருதுகின்றேன்.

அடுத்து, தூய தமிழில் கதைகளை எழுத இயலாது என்று, தென்மொழி தொடங்கிய காலத்தில் பலர் கூறினர் என்பதற்காக அப்பொழுது அடிக்கடி கதைகளை வெளியிட்டோம் ; நாடகங்களை வெளியிட்டோம். என் கதைகள் கூட வெளிவந்திருக்கின்றன. பிறகு கதைகளையே வெளியிடும் இதழ்கள் நூற்றுக்கணக்கில் இருக்கும் பொழுது நாமும் ஏன் அவற்றையே வெளியிட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று கருதி அதைத் தவிர்த்தோம். இப்பொழுது கூட தூய தமிழில் சிறப்பான சிறு கதைகள் எவரேனும் எழுதினால் இரண்டு மூன்று இதழ்களுக்கு ஒரு முறை வெளியிடலாம். ஏனெனில் தொடக்கத்தில் தென்மொழி எண்பது பக்கங்கள் வரை வெளிவந்தன. பிறகு படிப்படியாகக் குறைந்து 32 பக்கங்களே வெளிவருகின்றன.

துணுக்குகளும் அப்படித்தான். தொடக்கத்தில் நிறைய வெளிவந்தன. இக்கால் மிக அருகியே வெளியிடுகின்றோம்.

எல்லாவற்றுக்குமே இடமின்மைதான் தலையாய காரணம். ஆனால், தகுதியான எதையுமே வெளியிடக் கூடாது என்று நாங்கள் நினைப்பதற்கு இடமில்லை. அப்படியொரு கொள்கையுமில்லை.

8. தென்மொழி அலுவலகம், கடலூரிலிருந்து சென்னைக்கு மாற்றப்பட்டதன் நோக்கம் என்ன ?

கடலூரில் நான் அரசுப்பணியிலிருந்து கொண்டிருந்த பொழுதே 1959-இல் இதழ் தொடங்கப் பெற்றது. 1965 இந்தி எதிர்ப்பின் பொழுது அரசு என் மேல் வழக்குப் போட்டுக் குற்றஞ் சாட்டிச் சிறைக்கனுப்பியது. சிறையிலிருந்து வெளிவந்த பின் என்மேல் அலுவல் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பெற்று

1967 தொடக்கத்தில் என் அலுவல் போனது. அப்பொழுதிலி ருந்து அச்சகத்தைச்சென்னைக்கு மாற்ற வேண்டும் என்று முயன்று வந்தேன். ஏனெனில் நம் கொள்கைகள் வளரவும் அவற்றை வளர்க்கவும் உகந்த இடம் சென்னைதான் என்று உறுதியாக நம்பி னேன்.

1974-இல் முதல் முறையாக நான் சிங்கப்பூர்-மலேசியா சுற் றுச் செலவு (மூன்று மாதம்) முடித்துக் கொண்டு வந்தபின் முதல் வேலையாகச் சென்னைக்கு அச்சகத்தை மாற்றினேன். ஏனெனில் அப்பொழுதுதான் அதற்கான பொருள்நிலை வாய்ப்பாக அமைந் தது.

9. தென்மொழி இதழின் வளர்ச்சிக்குரியவர்களாக யார்யாரைக் குறிப்பிடுகிறீர்கள் ?

முதன் முதலாக, அதன் வாசகர்களையே குறிப்பிட வேண்டும். அத்துடன் தொடக்கத்தில், இதன் தோற்றத்தின் பொழுது, எனக்கு மிகவும் உறுதுணையாகவும் ஊக்கமாகவும் இருந்து, என் னோடு தோளொடு தோள் கொடுத்தும் உழைப்பைக் கொடுத்தும், அவ்வப்பொழுது தொய்வு ஏற்படா வண்ணம் உதவியும் வந்தவ ராக இருந்தவர், என்னோடு அரசுப் பணியாற்றிய திரு. செ. பன்- னீர்ச்செல்வம் என்னும் என் கெழுதகை நண்பரே. அவர் பின்னர் சென்னைக்கு மாறுதல் பெற்றுச் சென்றார். அதன் பின் 'தமிழம்' என்று ஓர் இதழையும் நான் விரும்பியவாறு தொடங்கி, செம்பி- யன் என்னும் புனைபெயரில் இரண்டு, மூன்று ஆண்டுகள் நடத்தி வந்தார்.

அவர் சென்னைக்கு மாறுதலான பின்னர் இதற்காக என்னோடு உழைத்த திருவாளர்கள், பாவலர். ம. இலெ. தங்கப்பா, இன்று மு. தமிழ்க்குடிமகன் என்று அழைக்கப் பெறும் மு. சாத்தையா முதலியோர் தொடக்கத் துணையாக இருந்தவர்கள்.

இவர்களையல்லாமல் உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் அவ் வப்போதும், தொடர்ந்தும், விற்பனை வகையிலும், பொருள் வகையிலும், உறுப்பினர்களைச் சேர்க்கும் நிலையிலும் இவ்விதழின் வளர்ச்சிக்கு உதவியவர்கள், உதவி வருபவர்கள் நூற்றுக்கணக் கான அன்பர்கள், ஆசிரியர்கள், அறிஞர்கள், செல்வர்கள் ஆகி யோர் உளர் ; அவர்களின் பெயர்களையெல்லாம் தேவையான இடத்துத் தேவையான முறையில் வெளிப்படுத்துவேன்.

10. அரசு தென்மொழி இதழை 1975-இல் தடைசெய்யக் காரணம் என்ன ?

தென்மொழி இதழ்ச் சார்பில் 1975-இல் தமிழக விடுதலை மாநாடு நடத்தப் பெற்றது. அது தொடர்பான செய்திகள், அறிக்கைகள் இதழில் வெளிவந்தன. எனவே அரசு அவை வெளி வந்த குறிப்பிட்ட இதழ்களைத் தடைசெய்தன.

11. இதழ் தொடங்கிய ஓராண்டில் இதழை நிறுத்தியது ஏன் ?

எல்லாம் போதிய பொருளின்மைதான் கரணியம். சிறிய முதலீட்டில் இவ்விதழைத் தொடங்கினேன்; விளம்பரம் முதலிய பிற வருவாய்களும் இல்லாத நிலையில் ஓராண்டிற்குள் இதழ் தட்டுத் தடுமாறி நின்றது. பிறகு பல்லாற்றானும் முயன்று இதை மீண்டும் கொண்டு வர இரண்டு ஆண்டுகள் ஆயின.

12. தாங்கள் 1976-இல் சிறை சென்றதன் காரணம் பற்றியும், பெற்ற பட்டறிவு (அனுபவம்) குறித்தும் அறிந்து கொள்ளலாமா ?

நெருக்கடி நிலை 1976-இல் நடுவணரசால் அறிவிக்கப் பெற்று, 'மிசா'ச் சட்டம் நடைமுறைப் படுத்தப் பெற்றது. அந்நிலையில் தமிழக அரசு கலைக்கப்பட்டது. நாடு முழுதும் நடுவணரசுக்கு எதிராகக் கருத்தறிவித்த பல்லாயிரக்கணக்கான எதிர்க்கட்சித் தலைவர்கள், அரசியல் காரர்கள், அறிஞர்கள், தொண்டர்கள் சிறையிலிடப் பெற்றனர். அக்கால், தனித்தமிழ்நாடு கேட்டுக் கொண்டிருந்த நானும் சிறைப் பிடிக்கப் பெற்று ஓராண்டுச் சிறையில் வைக்கப் பட்டேன்.

சிறையில் நிறைய ஓய்விருந்ததால், நிறைய நூல்களைப் படித்தேன். நூற்றுக் கணக்கான பாடல்களை எழுதினேன் ; 'ஐயை' யின் இரண்டாம் பகுதியை எழுதினேன். திருக்குறளை முழுவதும் அங்கிருந்த அரசியல் தலைவர்களுக்கு வகுப்புகளாகத் தொடர்ந்து நடத்திப் பாடம் சொன்னேன். அதன் விளைவாகத் திருக்குறளுக்குத் 'திருக்குறள் மெய்ப் பொருள் உரை' என்னும் பெயரில் புதிய முறையில் ஐயாயிரம் பக்கங்கள் மிக விரிவாக ஓர் உரை எழுத வேண்டும் என்று எண்ணிப், பல நூல்களை ஆராய்ந்து, அவ்வுரைக்கென எண்ணாயிரம் குறிப்புகளை எடுத்தேன். இஃது அச் சிறை வைப்பால் ஏற்பட்ட அறிவுப் பயன்.

இனி, இன்னொரு செய்தியும் இங்குக் குறிப்பிட வேண்டும். மிசாக் காலச் சிறையில் என்னொடு சென்னை நடுவண் சிறையில் இருந்த அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் ஏறத்தாழ ஐநூற்றுவர். அவர்கள் அனைவர்க்கும் அவரவர் கட்சிகளிலிருந்து மாதம் 200, 300, 500, 1,000 என்று அவ்வக் கட்சிகளின் நிலைகளுக் கேற்ப உதவித் தொகைகள் அவரவர் குடும்பங்களுக்குக் கிடைத்தன. நான் எந்தக் கட்சியையும் சார்ந்தவனாக இல்லாமலிருந்ததால் எனக்கு ஒரு கட்சியும் உதவி செய்யவில்லை. ஆனாலும், அக்கால், ஆதரவின்றியிருந்த என் குடும்பத்துக்குத் தென்மொழி அன்பர்களும், நல்லவர்கள் சிலரும் 5, 10, 100 என மாதாமாதம் நான் வெளிவரும் வரையில் நன்கொடைகளை அனுப்பிக் கொண்டிருந்தனர்.

மற்றபடி எனக்கு ஏற்கனவே சிறை சென்ற பட்டறிவு இருந்ததால் நான் மனநெகிழ்ச்சி கொள்ளாமல் இருந்தது குறிப்பிடத் தகுந்தது. இது தொடர்பான பிற செய்திகளை அக்கால் வெளிவந்த தென்மொழி இதழ்கள் வழித் தெரிந்து கொள்ளலாம்.

13. தாங்கள் தொடங்கிய தென்மொழி, தமிழுக்கும், தமிழினத்திற்கும் எந்த வகையில் தொண்டாற்றியுள்ளது ?

மறைமலையடிகளார் வெறும் கொள்கையளவில் அறிவித்த தனித்தமிழ் இயக்கத்தையும், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் வெறும் ஆராய்ச்சியளவில் கண்ட தமிழ் மொழி முதன்மைக் கருத்துகளையும், செயலளவில் படித்த மக்களிடையேயும், ஓரளவு பொது மக்களிடையேயும் பரப்பிய பெருமை தென்மொழியையே சாரும் என்றால், அது மிகையாகாது.

இன்று அரசு கடைப்பிடித்து வரும் பன்னூற்றுக்கணக்கான தூய தமிழ்ச் சொற்களும், மொழிபெயர்ப்புகளும் பெரும்பாலும் தென்மொழி வழியாக அறிவிக்கப்பட்டவையே ஆகும். இன்று மாணவர்களிடையிலும், தமிழ்ப் படித்த அன்பர்கள், அதிகாரிகள் இடையிலும் கலப்பில்லாத தூய தமிழ் உணர்வு பரவியிருப்பதற்கு ஓரளவு தென்மொழியின் தொண்டே காரணமாகும்.

தென்மொழி படித்த, படித்து வரும் பல்லாயிரக்கணக்கான மக்களிடையில், சாதியுணர்வு குறைந்து காணப்படுவதற்கும், தமிழின உணர்வு மிகுந்து காணப்படுவதற்கும், அரசியல் கட்சி உணர்வு தணிந்து இருப்பதற்கும் தென்மொழியின் நடுநிலையான இனவுணர்வுக் கருத்துகளே காரணம் ஆகும். உலகெங்கும் உள்ள தென்மொழி யன்பர்களிடையில் நல்ல தமிழ்ப் பற்றும், அறிவும், தூய மொழி, இனநலச் சிந்தனைகளும் தோன்றியதற்கும் வளர்ந்து வருவதற்கும் தென்மொழியே காரணம் என்று அவர்கள் சொல்வதைக் காதாரக் கேட்கலாம்.

இவ்வுண்மைகளை என் ஐரோப்பிய, மலேசிய, இலங்கை, அந்தமான் போன்ற வெளிநாட்டுச் சுற்றுச் செலவுகளுக் கிடையில் நானே நேரில் கண்டு, கேட்டு உணர முடிந்தது. அச் சுற்றுச் செலவுகளின் பொழுது என்னுடன் வந்தவர்களாலும் இவ்வுண்மைகளைக் காண முடிந்தது.

14. தமிழகம் தன்னாட்சி பெற முடியுமென்று தாங்கள் கருதுகிறீர்களா ?

இஃதொன்றும் மலையைக் கரைக்கின்ற செய்தியோ, கடலை வற்றடிக்கின்ற செய்தியோ அன்று. அவையும் கூட இற்றை நாள் அறிவியல் வளர்ச்சிக் காலத்தில் முடிகின்ற செய்திகளே !

தமிழகம் தன்னாட்சி என்பது, தமிழகம் நடுவணரசு, ஆட்சியதிகாரத்திலிருந்து விடுதலை பெறுவதே ! இது வெறும் ஆட்சி மாற்றந்தான். ஒருவர் கையிலிருக்கும் ஆட்சி அதிகாரம் இன்னொருவர் கைக்கு மாறுவதும் மாற்றப்படுவதும் முடியாத—வியப்பான செயலன்று. முடிகின்ற செயல்தான், அது. வெள்ளைக்காரர்களின் கையிலிருந்த ஆட்சி, வடநாட்டார் கைகளுக்கு வரவில்லையா ? அதுபோன்றதே அது தமிழ் நாட்டார் கைக்கு வரவேண்

(தொடர்ச்சி 25-ஆம் பக்கம் பார்க்க.)

இன்றுள்ள தமிழர்கள்!

நூல்: தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்.
ஆசிரியர் : பர்.க. ப. அறவாணன்.
விலை : 304 பக்கம். உரு 25/-
கிடைக்குமிடம் : ஐந்திணைப் பதிப்பகம்,
282, பைகிராப்ட்சு சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-5.

மொழிநிலை :

இனப் பிரிவிற்கு அடிப்படையான உயிரியல் காரணம் ஒழிந்து வருகிறது. வண்ணமும் உடல் உறுப்பு அமைப்புகளும் எவ்வாறு உயர்வு தாழ்விற்குக் காரணங்களாக அமைந்தனவோ, அதனைப் போலவே, மொழியும் இன வேறுபாட்டின் அடையாளமாகவும், இன வெறுப்பின் அடையாளமாகவும், பல வளரும் நாடுகளில் அமைந்து விட்டது. இது குடியமர்த்த (காலனி) ஆட்சியின் விளைவுகளுள் ஒன்று. சிற்சில இடங்களில் மொழியே இனத்தை வரையறுக்கும் கூறாக அமைந்து விட்டது. பல நாடுகளை அரசியல் நாட்டு எல்லைகள் கூறுபடுத்துகின்றன ; பல நாடுகளை மொழிகளே தனி நாடுகள் ஆக்கியுள்ளன. நாட்டு எல்லைகளை மதப் பின்பற்றுதல் சில இடங்களில் தீர்மானித்தது ; சில இடங்களில் அரசியல் வெற்றிகள் தீர்மானித்தன. சில இடங்களில் இனப் பிரிவுகள் தீர்மானித்தன. இப்போது மொழிகளும் பல இடங்களில் தீர்மானிக்கின்றன.

களப்பிரர், பல்லவர் காலம் தொடங்கி *(1700 ஆண்டுகள்)* அண்மைக் காலம் வரை, தமிழர் சமசுகிருதத்தைத் தேவ மொழி என்று கருத வைக்கப்பட்டனர் ; தம் தமிழ்மொழி 'நீச பாஷை' என்று நம்ப வைக்கப்பட்டனர். சமசுக்கிருத மொழிக்குரியோர் தேவர்கள் என்றும், தமிழ்மொழிக்குரிய தாங்கள் 'நீசர்களே' என்றும் இவர்களே ஒத்துக் கொள்ளுமாறு செய்யப் பட்டனர். இந்தத் தேவநிலையை ஏற்றுக் கொண்ட தமிழர், அடுத்தடுத்து ஆட்சியில் இருந்த உருது, தெலுங்கு, மகாராட்டிரம் முதலான மொழிகளுக்கும் தேவத்தன்மை கொடுத்தனர். இவற்றின் பின், ஆட்சி வழி ஆங்கிலம் குடியேறிய போது அப்படியே அதனையும் எதிர்க்காமல் ஏற்றுக் கொண்டனர். தற்போது, அதே இடத்தில் வேறொரு மொழி(இந்தி)யையும் ஏற்க ஆயத்தமாக இருக்கின்றனர். சுமைகளைச் சுமந்தே பழக்கப் பட்டுப் போன ஒட்டகத்திற்குச் சில சுமையை அகற்றினாலும் பயணம் போகாது என்பது போலவே, தமிழர் மொழிச் சுமையை இழக்க ஆயத்தமாக இல்லை.

அழுக்கேறி நெடுங்காலம் குளிக்காமல் இருக்கும் ஒருவர்க்கு அந்த அழுக்கே நோயாகத் தெரிதலைப் போல், தமிழர் உடம்பில் பல்லாண்டுகளாக ஏறிய வேறு வேறு இனப் பண்பாட்டு மேலாண்மைகள் வேறு பிரிக்க முடியாமல் ஒன்றி ஒட்டிக் கொண்டு விட்டன.

மொழி ஒரு தொடர்புக் கருவி மட்டுமா ?

'மொழி, மாந்தன் நினைப்பவற்றை மற்றவர்க்கு எடுத்துச் சொல்லும் ஒரு தொடர்புக் கருவியே. அதற்கு மேல் மொழிக்கு முதன்மை கொடுப்பது பேதைமை' என்று பலர் எழுதுகின்றனர்; பேசுகின்றனர்.

ஆனல், ஆழ்ந்து நோக்கின், தமிழர் போன்ற—நூற்றுண்டுகளாகத் தாய்மொழிக் கல்வியறிவு கூட இல்லாமல் ஒடுங்கிக் கிடக்கும்—மக்கள் குமுகத்திற்கு—மொழி ஒரு தொடர்புக் கருவி மட்டுமன்று; அதற்கும் மேலான உடைமை, உயிர் என்பது புலப்படும். வரப்பில் நின்று வயலில் வேலை செய்யும் உழவனைப் பார்க்கும் முதலாளிக்கு உழவனின் கையிலுள்ள மண்வெட்டி ஒரு கருவியாகத்தான் புலப்படும். ஆனல் அந்த உழவனுக்கு மண்வெட்டி வெறும் கருவி மட்டுமன்று ; அதுவே அவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் சோறு போடும் கடவுள். ஆம், அவன் பார்வையில் மண்வெட்டி ஒரு கடவுள் தான்.

1947 வாக்கில் கிட்டத்தட்ட நூறு விழுக்காடு பிராமணர் அல்லாத மக்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தனர். அவர்களுக்கு அவர் தம் தாய்மொழியாகிய தமிழில் பேச மட்டுந்தான் தெரியும். அதனல் அவர்கள் எந்த அரசு அல்லது தனியார் ஆளுமை நிறுவனத்துடனும் நேர்த் தொடர்பு கொள்ள முடியாது. தொடர்பு கொள்ள வேண்டுமானல், ஆங்கிலம் வழியாகத்தான் முடியும்.அதற்காக ஆங்கிலம் படித்த ஒருவனின் முன் ஒரு தொலைவரிச் செய்தியைப் படிக்கக் கூட இயலாமல் கை கட்டி நிற்பான். அவன் உழைப்பை—அவர் உழைப்பால் தின்று கொழுத்து வாழும் ஆங்கிலம் படித்த பிரிவினம் அவனைச் செருக்கோடு நோக்கும் ; அவன் தாழ்ந்து குனிந்து நிற்பான்.

அவன் பிள்ளைகள் முதன் முதலாகப் பள்ளிக்குச் செல்ல நேருகையில், பிள்ளைகள் வீட்டில் பேசிய மொழியைப் பள்ளியில் பேச முடியாது ; பேசக் கூடாது. ஆக, அடுத்து வரும் தலைமுறையும் ஆங்கிலம் தெரிந்த கூட்டத்திற்கு முன் தாழ்ந்தே நிற்க வேண்டியிருந்தது.

அந்த மக்கள் கடவுளிடம் முறையிடக் கோவிலுக்குச் சென்றார்கள். சென்றவர்கள் வெளியே நிறுத்தப்பட்டனர். வழிபாட்டுக்குரிய காசுகளைக் கொடுத்துவிட்டுக் கைகட்டி, வாய் புதைத்து நின்றனர், அம் மக்கள். கடவுள் முன்பு ஏதேதோ முணுமுணுக்கப்பட்டது. அந்த மொழியும் அவர்களுக்குத் தெரியாது. அனைத்துக்கும் அப்பாற்பட்ட ஆண்டவனிடம் கூடத் தங்களுக்குத் தெரிந்த மொழியால் அவர்களால் வழிபட முடியாது. ஆகக் கோயிலிலும் தாழ்ந்த நிலை.

அவர்கள் வீட்டில் பிள்ளைகளுக்கு அவர்கள் செலவில், திருமணம் நிகழும் போது கூட அவர்களின் சொந்த மொழியில் மண நிகழ்ச்சியை நடத்த அவர்களால் முடிவதில்லை. அங்கேயும் வேற்று மொழி வல்லாண்மை.

மண நிகழ்ச்சி மட்டுமன்று ; பிண நிகழ்ச்சியில் கூட அவர்கள் அறிந்த தாய்மொழிக்கு இடமில்லே. இறந்துபோன முன்னோர் நினைவு நாளன்றும், வழிபடும் நாளன்றும் நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்திலும் அயல்மொழி ஆளுமை.

வைப்பகத்திற்குச் சென்றால் அங்கே, தொடர் வண்டி நிலையத்திற்குச் சென்றால் அங்கே; அஞ்சலகத்திற்குச் சென்றால் அங்கே, அரசு அலுவலகங்கள் எங்குச் சென்றாலும் அங்கே,- என எங்கெங்குப் பார்க்கிலும் வேற்றுமொழி ஆளுமை. தமிழனைத் தன் மொழி பற்றிய நிலையான தாழ்மை உணர்வு கொள்ளச் செய்து விட்டது.

'நாடு உரிமை பெற்ற பின்பு இந்த நிலைகள் மாறும் ; ஆங்கில ஆளுமை மொழி இருந்த இடத்தில் தாய் மொழி தமிழ் இடம் பெறும் ; அவனும் பிள்ளைகளும் எளிதாக அவர்கள் மொழியில் பேசி, படித்து, எழுதி, அலுவல் பார்த்து, முன்னேறலாம்' என்று அவனுக்கு, அன்றைய அரசியல் கட்சியால் நம்பிக்கை ஊட்டப் பட்டது. ஆனால் அந்த நம்பிக்கையும் ஒரு முழு ஏமாற்று என்பது, நாடு விடுதலை பெற்ற பின் தெளிவாகி விட்டது.

ஆளும் இடங்களிலிருந்து ஆங்கிலம் அகற்றப்பட்டமை, அகற்றப்பட்டுக் கொண்டு வருகின்றமை என்னவோ உண்மைதான். ஆனால் ஆங்கிலத்தின் இடத்தில் இவனுக்கு உரிமை பெறும் முன்பு சொல்லப்பட்டது போல், அவன் நம்பிக் கிடந்தது போல், அவனுடைய தாய்மொழியாகிய தமிழ் இடம் பெறவில்லை. அந்நிலைக்கு முற்றும் மாறாக, இந்தி மொழி அரியணை ஏற்றப் படுவதை அவன் கண்டான் ; கண்டு கொண்டிருக்கிறான். ஒரு மொழி ஆளுமைக்கு அடிமைப்பட்டிருந்த நிலைமை விரிந்து, இந்தி என்னும் இரண்டாவது மொழிக்கும் அவன் உரிமை பெற்ற பின் அடிமைப்பட நேர்ந்ததுதான் அவனுடைய இக்கட்டான நிலை. எனவே, ஏற்கனவே மொழிவழி அடிமைப்பட்டுத் தாழ்வுணர்வுக்கு ஆட்பட்ட அவன், மேலும் நம்பிக்கை இழந்து, மீண்டும் இன்னொரு மொழிக்கு அடிமையாக ஆயத்தம் ஆகி விட்டான்.

தாய் மொழி தமிழால் என்ன பயன் ? வேலை கொடுக்குமா ? கொடுக்காது. வேறு மாநிலத்தில் வேலை பெற முடியுமா ? முடியாது. வெளி நாடுகளில் வேலை பெற இயலுமா ? இயலாது. உள்ளூர் அற மன்றத்தில் அவன் மொழி செல்லுபடியாகுமா ? ஆகாது. நடுவணரசு அலுவலகத்தில் தமிழ் மொழி வழி அவன் தொடர்பு கொள்ள முடியுமா ? முடியாது. கோயிலுக்குப் போனால் தமிழால் வணங்க முடியுமா ? முடியாது. இப்படி எங்கும் எதிலும் தன் மொழியால் முடியாது என்று தமிழன் முதுகு ஓடிக்கப்பட்ட நிலையில் தன்மொழி பற்றிய தாழ்வுணர்ச்சியை நிலையாக அவன் கொள்ளத் தொடங்கி விட்டான்.

மொழிவழியாகத் தாழ்வுணர்ச்சி ஏற்படுகிறது. அது அந்த மொழி பேசும் மாந்தனையும் தாழ்வுணர்ச்சி உடையவனாகச் செய்

கிறது என்பதுதான் உண்மை. தமிழர்களுள் பெரும்பாலோர் தாழ்வுணர்ச்சி நோயால் பற்றப்பட்டிருப்பதற்குத் தலைமையான காரணங்களுள் ஒன்று, அவர் தம் தாய்மொழி தமிழ் தொடர்ந்து தலைமை இடத்தில் இல்லாமல் பின்னுக்கு, மிக மிகப் பின்னுக்குத் தள்ளப்பட்டதாகும்.

ஒரு மொழி ஒரு புதிய இனத்திற்கு அறிமுகம் ஆகும் போது, அறிமுகம் ஆக்கப்படும் போது, அது வெறும் கருவி என்ற அளவில் மட்டுமல்லாமல், (வேறு வகையால்) அறிமுகப் படுத்தப் படுவது இல்லை. அந்த மொழிவழி அந்த மொழிக்குரிய மக்களின் கலை, பண்பாடு, நாகரிகம் முதலானவையும், புதிதாகப் பயிலும் மக்களின் மனத்தில் ஏற்றப்படும்.

உலகெங்கிலும் ஆங்கில, பிரஞ்சு, இசுபானிசு (Spanish) குடியிருப்புகள் பரவிய பொழுது, அந்தந்த மொழிகளும் குடியிருப்பு நாடுகளில் திணிக்கப்பட்டன. மண்ணைக் கைப்பற்றும் ஆளுமைக்காரர்கள் அந்தந்த மண்ணுக்குரிய மொழியைப் படிப்பதில்லை; பேசுவதில்லை; எழுதுவதில்லை. மாறாக, மண்ணின் மக்களைத் தங்கள் மொழியைப் படிக்க, எழுத, பேசப் பழகுவித்தனர். இதனால் அவர்களுக்கு ஏற்பட்ட பயன்கள் பல. அவை,

1. அந்த மண்ணின் மொழியைப் படிக்க வேண்டிய சுமை ஆளுமைக்காரர்களுக்கு இல்லாமல் போய் விட்டது.

2. புதிய மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டிய முயற்சியும், கடமையும் உள்ளூர் மக்களுக்குப் போய்ச் சேர்ந்தன.

3. தங்கள் மொழியை மட்டுமின்றி, மொழி வழியாகத் தங்கள் கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றையும், தாங்கள் ஆட்சிப் படுத்திய குடியிருப்பு நாடுகளில் எளிதில் பரப்ப முடிந்தது.

4. இதனால், குடியிருப்பு நாட்டு மக்கள் மொழி, கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியன தாழ்வுற்றவை என்று தவறாக நம்பவும், இறக்குமதியான கலை, பண்பாடு முதலியவை உயர்வாகக் கருதவும் எளிதாக ஏற்கவும், கற்கவும் நேர்ந்தன.

5. ஆளுமைக் காரர்கள், தங்கள் நாட்டில் உருவாகும் கலைப் பொருள்கள், உடை, உணவு முறைகள், இலக்கியங்கள், நாடகம், திரைப்படங்கள், தாளிகைகள் முதலானவற்றைக் குடியிருப்பு நாடுகளில் விடுதலைக்குப் பிறகும் நிலையான விற்பனை செய்ய ஒரு நிலையான கட்டாயத்தைக் குடியேற்றக் கால ஆட்சி மொழிப் பயிற்சி ஏற்படுத்தியது. சுருக்கமாகச் சொன்னால், குடியமர்த்த ஆட்சியிலிருந்து விடுபெற்ற நாடுகள் அரசியல் விடுதலை பெற்றுள்ளன; அவ்வளவே. அவை மொழி, பண்பாடு, கலை, நாகரிகம் ஆகியவற்றால் இன்னும் குடியேற்ற நாடுகளுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றன என்பது தான் உண்மை.

6. எனவே, உலகெங்கும் ஒரு நிலையான பழக்கத்துக்கு' அடிமையாகும் நுகர்வோர் குமுகத்தை(Addict—Consuming Soci-

ety) ஆளுமைக் காரர்கள் தம் ஆட்சி மொழிகளால் உண்டாக்கிக் கொள்ளுகின்றனர்.

ஆகவே, மொழியை வெறும் தொடர்புக் கருவி என்று பேசுவது குடியிருப்பு நாடுகளின் பார்வையில் பொருத்த மற்றதாகிறது. குடியிருப்பு நாட்டு மக்களை நிலையாக முடமாக்கும் ஒரு முயற்சி தான் வேற்றுமொழிகளின் வரவும், உறவும், வாழ்வும் ஆகும்.

பிரஞ்சு மொழியைக் கற்பிக்கும் தொடக்க நூல்களை வெறும் பிரஞ்சு மொழிப் பயிற்சி நூல்கள் என்று அவர்கள் போடுவதில்லை. அவற்றை அவர்கள் 'பிரஞ்சு மக்களின் மொழியும் நாகரிகமும் (Langue Francais et Civilization) என்றே அழைக்கின்றனர். காரணம் மொழிக் கல்வியுடன் அந்த மொழி பேசும் மக்களின் நாகரிகமும் கற்பிக்கப்படும். நாணயத்தின் ஒரு பக்கம் மொழி என்றால், அதன் மறுபக்கம் பண்பாடு அல்லது நாகரிகம் என்றுதான் பொருள்.

வருங்காலத்தில் ஒரு மொழி என்பதை அதான் கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றுக்கு அப்பாலிருந்து கற்றுக்கொள்ளும் நிலைமை ஏற்படலாம். அது முழுக்க முழுக்க மொழியியல் என்னும் அறிவியல் அறிஞர்களின் செயலாக அமையலாம். ஆனால் ஒரு மொழி அரசியல் காரணங்களால் அறிமுகம் ஆகிறது என்றால், அதன்வழி கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியன புதிதாக மொழியைக் கற்போருக்கு இலைமறை காயாக ஏற்றுமதி செய்யப் படுகின்றன என்பதே பொருள்.

அறிவியல் — மொழியியல் வழி ஒரு மொழியைக் கற்பது வேறு ; கற்பிப்பது வேறு. அரசியல் நெறிவழி ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது வேறு ; கற்பிக்கச் செய்வது வேறு ; தமிழ் நாட்டில் அரசியல் நெறிவழியே அயல் மொழிகள் நுழைக்கப்பட்டன ; நுழைக்கப்பட்டு வருகின்றன.

எனவே, இந்தி கற்பிக்கப்படுகிறது என்றால், இந்தி மொழி வழி அன்னோர்க்குரிய கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியன நுழைக்கப் படுகின்றன ; நுழைக்கப் படும். ஆங்கில மொழி கற்பிக்கப் படுகிறது என்றாலும் அதே நிலைதான். ஆரிய மொழியாகிய சமசுக்கிருதம் கற்பிக்கப் பெற்றது என்றாலும், அதன் வரலாறும் இதுவேதான். இதனை இன்னும் விரிவாகத் தமிழ் நாட்டின் முந்தைய வரலாறு தொடங்கி இன்றைய வரலாறு வரை பார்ப்போம்.

இவ்விடத்தில் இன்னொரு முகாமையான செய்தியை மறந்து விடலாகாது. அயல் மொழி புதிய கலை, பண்பாடு, நாகரிகம் முதலானவை அறிமுகம் ஆகின்றன என்றால் சொந்த மொழிக்குரிய கலை, பண்பாடு, நாகரிகம் முதலானவை புதைக்கப் படுகின்றன என்பதுதான் பொருள். அதற்குச் சரியான சான்று, தமிழ், தமிழ், தமிழேதான் !

பேப்பர் !

தமிழர்கள் பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதிக் கொண்டிருந்த பொழுது, எகிப்தியர்கள் 'பேப்பைரசு' என்னும் நாணல் புல்லை எழுதும் ஏடாகப் பயன்படுத்திக் கூர்மையான எலும்புத்துண்டைக் கொண்டு எழுதினார்கள். உண்மையில் அதன் பெயர் 'பாண்டிக்குரம்' என்பது. இது நாணல் புல் அன்று. தமிழ் நாட்டில் இப்பொழுது இருப்புப்பாதை ஓரத்தில் விளையும் கற்றாழை போன்ற ஒரு கற்றாழை வகை. உள்ளிருக்கும் சோற்றை நீக்கி விட்டுப் படலங்களைப் பதப்படுத்தி ஏடு ஆக்கி எழுதப் பயன்படுத்தினார்கள். அந்த ஏட்டுக்குத்தான் 'பேப்பைரசு' என்று பெயர்.

இந்தப் 'பேப்பைரசு' என்பதிலிருந்துதான் 'பேப்பர்'(Paper) என்ற சொல் பிறந்தது. இத்தகைய பேப்பைரசு சுருள்களைக் கிரேக்கர் 'பிப்பிலியன்' என்றார்கள். இதற்கு 'நூல்' என்று பொருள். இதிலிருந்து 'பைபிள்' என்ற சொல் உண்டாயிற்று. ○

காகிதம் !

இன்று நாம் பயன்படுத்தும் தாளுக்கு 1, 900 அகவை ஆகிறது !

கி. பி. 105-இல் சாய்லன் என்ற சீனக்காரர் முதன் முதல் இந்தத் தாளைச் செய்தார். அவர் சீன மன்னரிடம் அமைச்சராக இருந்தவர். மல்பெரி மரப்பட்டையிலிருந்து தாள் செய்தார். பின்பு கந்தல் துணிகளில் இருந்து அவர் தாள் செய்தார். அந்நாளில் அதைத் தொடக்கூட சிலர் மறுத்தார்கள். 'தூய்மையில்லை' என்று கருதினார்கள்.

சீனர்களுடன் வணிகத் தொடர்பு கொண்டு இருந்த அரேபியர் அவர்களிடமிருந்து தாள் செய்யும் முறையை அறிந்து கொண்டார்கள். அரேபியர் தாளைக் 'காகத்' என்றார்கள். 795-ஆம் ஆண்டில் பாக்தாத்தில் தாள் செய்யும் ஆலை ஒன்றை அரேபியர் நிறுவினார்கள்.

அரேபியர்களிடமிருந்து இந்தியர்கள் தாள் செய்வதைக் கற்றார்கள். இவர்கள் 'காகத்'தைக் காகிதம், காயிதம் என்று சொன்னார்கள்.—நூல்' தமிழ் இதழ்கள்-தோற்றம்-வளர்ச்சி' ○

(முன் பக்கத் தொடர்ச்சி)

உரோமானியர் தம் ஆட்சி, இத்தாலி (கி.மு. 265), வார்ரனியா (கி.மு. 227), இசுத்திரியா (கி.மு. 178), இசுப்பெயின்(கி.மு. 133), கல் (கி.மு. 50), பாகியா (கி.பி.06) ஆகிய நாடுகளில் பரவிய போது, (உரோமானியரின் ஆட்சி மொழியாகிய) இலத்தீன் அந்நாடுகளில் பரப்பப்பட்டது. அந்நாட்டு மக்கள் தங்கள் மொழிகளை விட்டு விட்டு, உரோமானியரின் இலத்தீன், அவர்களின் கலை, பண்பாடு, மொழி இவற்றைப் பெரிதாக எண்ணிப் போற்ற வேண்டியிருந்தது. இலத்தீன் அனைத்து நிலைகளிலும் செழித்து வளர்ந்து சாய்கால் பெற்றது.

—(தொடரும்)

செந்தமிழ்நூல் வெளியீட்டுக் கழகம்.
பொது அறிவிப்பு.

பேரன்புடையீர் ! வணக்கம் !

நீண்ட நெடுநாள்களாகக் கருத்தில் இருந்துவந்த "செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கழக, அமைப்புத் தொடர்பாக அண்மையில் கீழே கையொப்பமிட்டுள்ள தென்மொழி ஆர்வலர்களும் அன்பர் களுமாகச் சேர்ந்து, ஒரு முடிவெடுத்து இந்த வேண்டுகோளை விடுக்கிறோம்.

அதன்படி மிக நெருக்கமும், தூய தமிழ் வளர்ச்சியில் ஆர்வ மும் தென்மொழியின் பால் இடையறாத ஈடுபாடும் கொண்ட நூறு அன்பர்களைத் தேர்ந்தெடுத்து ஒருங்கிணைத்து அவர்களை நூல் வெளியீட்டுக் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்திருக்கி றோம். அவர்களுடன் தாங்களும் ஒருவராகச் சேர்ந்து கொள் வதற்கான வாய்ப்புண்டு என்பதைப் பெருமையுடனும், மகிழ்ச்சி யுடனும் தெரிவித்துக் கொள்கிறோம். இதற்கு எல்லாருடைய முழு ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

நாங்கள் வகுத்துக் கொண்ட திட்டப்படி அவரவர்களுக்கு ஒதுக்கப்படவிருக்கும் பங்குத்தொகை உரு. 500, 1,000, 2,000, 3,000 ஆகும்.

இத்தொகையைவிட அவரவர்கள் பங்குக்கு கூடுதலாகவோ, குறைவாகவோ தங்களால் செலுத்த இயலும் என்ற நிலை இருக்கு மானால், அவர்கள் அவ்விருப்பத்தை எங்களுக்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன், அவர்கள் இத்திட்டத்தையும் அதில் அவர்களுக் குக் கொடுக்கப்பட்ட பங்களிப்பையும் முழு மனதுடன் ஏற்றுக் கொண்டார்கள் என்பதற்கு அடையாளமாக உடனடியாக ஒதுக் கப்பட்ட தொகையை முழுமையாகவோ, அல்லது குறிப்பிட்ட நாளுக்குள் அனுப்புகிறோம் என்கின்ற உறுதி மொழியையோ எங்களுக்கு உடனடியாக விடுத்து வைக்கக் கேட்டுக் கொள்கி றோம்.

இத் தொகையை, தற்காலிகப் பொருளாளராக அமர்த்தி இருக்கும் திரு. மா. பூங்குன்றன் மே/பா. தென்மொழி, சென்னை-5. என்னும் முகவரிக்கு மட்டும் குறித்து எடுக்கப்பெற்ற வரைவோலை(டிராப்ட்) வழியாக மட்டுமே அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இத்திட்டத்தின் வழி திரட்டப்படுகிற தொகையைக் கொண்டு பாவலரேறு அவர்களின் 'செயலும், செயல்திறனும்' என்கின்ற நூலை முதலில் பொங்கலன்றோஅதை ஒட்டியநாளிலோ சென்னையில் ஒரு வெளியீட்டு விழாவில் வெளியிடத் திட்டமிட்டி ருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது தொடர்பான ஆக்கவூக்கமான தங்கள் கருத்துகளை அனைவரிடமிருந்தும் நன்றியுடன் வரவேற்கிறோம்.

இவண்,
அமைப்புக் குழுவினர்.

1) திரு. நல்லப்பன், க.மு ; ச.இ. சென்னை உயர்நெறி மன்ற வழக்குரைஞர்.
2) திரு. தென்னவன்கோ, துணைப்பொதுச்செயலர், உ.த.மு.க.
3) திரு. கரிகாலன், கரூர்.
4) திரு. ந. இளமாறன், இளம் பொறியாளர், சென்னை.
5) திரு. முருகவேள், மதுரை.
6) திரு. குழந்தை ஈகவரசன், திருச்சி.
7) திரு. பூங்குன்றன் அறி.இ; க.மு.(தமிழ்)(பொருளாளர்) மே/பா. தென்மொழி.
8) திரு. துரை.தென்னவன், அசோக் இலேலந்து, சென்னை.
9) திரு. வெற்றிச் செல்வன் (செயலர்), வேளச்சேரி, சென்னை.
10) திரு. பொழிலன், (க.மு.) மே/பா. தென்மொழி.

தாங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :-
மா. பூங்குன்றன்,
மே/பா. தென்மொழி,
சென்னை - 600 005.

பெரியாரின் பெருந்தொண்டு!

தந்தை பெரியார் மொத்தம் 34, 433 நாள்கள் (94 ஆண்டு 3 மாதம் 7 நாள்) இவ்வுலகில் வாழ்ந்தார்.

அவர் 8, 200 நாள்களை மக்களைச் சந்திப்பதில் செலவிட்டார்.

அவர் மொத்தம் 1, 31, 200 கி. மீ. (ஏறத்தாழ 82, 000 கற்கள்) பயணம் செய்தார்.

இது நம் மண்ணுலகத்தை 33 முறை சுற்றி வருவதற்குச் சம மான தூரம் ஆகும்.

பெரியார் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் மொத்தம் 10, 700.

அவர் சொற்பொழிவு ஆற்றிய மொத்த நேரம் 21,400 மணி.

(இது வல்லாமல் அன்பர்களிடம் தனியாகப் பேசிக் கொண்டிருந்த நேரம் எவ்வளவோ ?)

அவர் பேசிய மொத்த சொற்பொழிவுகளை நாடாப்பதிவு செய்திருந்தால், அது தொடர்ந்து 2 ஆண்டு 5 மாதம் 11 நாள் ஒலித்துக் கொண்டே இருக்கும். ○

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)
டும் என்பதும். இது முடியாது என்பதற்கு எந்தக் காரணமோ அடிப்படையோ இல்லை. முயற்சி செய்தால் அனைத்தும் ஒரு கால கட்டத்தில் முடிந்தே ஆக வேண்டும். நான் கருதுவது போல், பலரையும் கருதும் படி செய்து விட்டால், இது செயலா வதற்கு நீண்ட காலம் ஆகாது.

15. பள்ளியில் சாதி, மதம் கேட்கக்கூடாது என்று குறித்துள் ளீர்களே, அது பற்றித் தங்கள் கருத்து என்ன ?

இந்தியாவில் உள்ள மக்களிடையில் மறுமலர்ச்சி தோன்றாமலி ருப்பதற்கும், முன்னேற்றம் ஏற்படாமலிருப்பதற்கும், இங்குள்ள சாதிகளும் மதங்களுமே முழுக் காரணங்களாக உள்ளன என் பதை நாம் அனைவரும் ஒப்புக் கொள்கிறோம். பொருளியல் பொதுவுடைமை பரவாமலிருப்பதற்கும் அவையே மூலகாரணங் களாக உள்ளன. சாதிகளும் மதங்களும் நம் கல்வியிலும் குறுக் கிடக் கூடாது என்பதே நடுநிலையாளர் கருத்தாகும்.

சாதிகள் ஒழிய வேண்டும் என்பதும் மதவேறுபாடுகள் கூடா என்பதும் எல்லாராலும் எல்லா நூல்களிலும் சொல்லப் பெற்று வரும் கருத்துகளாகும். ஆனால் அவற்றைச் செயல் படுத்த நாம் தயக்கம் காட்டி வருகிறோம். அவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று கூறிக்கொண்டே சலுகைகளுக்காகவும், மதப் பற்றை வளர்க்க வேண்டும் என்ற மறைமுக நோக்கத்திற்காகவும் பள்ளிச் சான்றிதழ்களிலேயே ஒருவருடைய சாதியையும் மதத்தையும் குறிக்க வேண்டும் என்று, மதப்பற்றும் சாதியுணர்வும் கொண்ட ஆட்சியாளர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சாதி, மதக் கோட்பாடுகளை மறைமுகமாக ஏதோ ஒரு காரணத்துக்காகத் தங்கள் கல்விச் சான்றிதழ்களில் குறித்துக் கொள்ள விரும்புகிற வர்கள் குறித்துக் கொள்ளட்டும். அவ்வாறு குறித்துக் கொள்ள விரும்பாதவர்களை ஏன் வற்புறுத்தி அவ்வாறு குறிக்கச் செய்ய வேண்டும்? இதில் என்ன ஞாயம் அல்லது நயன்மை இருக்கிறது ? சாதிப்பகுப்பும் மதப்பற்றும் எவ்வகையில் பிறவிக்குத் தொடர் புடையவை. ஓரினத்தின் மேம்பாட்டுக்காகவே அவை மக்க ளிடத்துப் புகுத்தப் பெற்றனவாக வரலாறு நமக்குக் கூறுகிறது. அவ்வாறிருக்கையில் அவற்றை ஒப்பாத அல்லது விரும்பாத ஒருவர் மேல் ஏன் வலுக்கட்டயமாகத் திணிக்க வேண்டும் ?

மேலும் மக்களெல்லாம் சமம், அவர்களிடையில் வேறு பாடுகள் இல்லை, ஏற்றத்தாழ்வுகள் கூடா—என்றெல்லாம் சட்ட அடிப்படையில் எழுதி வைத்துக் கொண்டு, அவர்களில் ஒரு சிலர் அவற்றை விரும்புகிறார்கள் என்பதற்காக, எதற்கு அனைவர் வகை யிலும் அவற்றைக் கட்டாயப் படுத்த வேண்டும்.

எனவே, பொதுப் பதிவுகளில் ஒன்றாகிய கல்விப் பதிவுகளி லேயே விலக்கி விடவேண்டும் என்பது தென்மொழியின் தெளிந்த கொள்கையாகும். அவ்வாறே அது கடைப்பிடித்தும் வருகிறது.

16. இந்தித் திணிப்பைப் பற்றிய தங்களின் கருத்துகள் யாவை ?

இந்திமொழி மட்டுமன்று, வேறு எந்த மொழியையுமே ஓரின மக்கள் மேல் வலிந்து திணிக்கக் கூடாது என்பதே மாந்தவியலுக்குப் பொருந்திய அறிவியல் கொள்கையாகும். அதுவும் விரும்பப் படாத ஒரு மொழியை, அரசியல் அதிகாரம் தங்களிடத்தில் உள்ளது என்னும் காரணத்திற்காக, எல்லா வகையிலும் மிகச் சிறந்த ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட, வரலாற்றுச் சிறப்புடைய ஓர் இனத்தின் மேல் (ஒன்றுக்கும் உதவாத, எவ்வகையிலும் சிறப்பில்லாத ஒரு புன்கலவை மொழியாகிய இந்தியைத்) திணிப்பது என்பது மிகக் கொடுமையான வல்லாண்மையும் அறக்கேடானதுமாகிய ஒரு செயலாகும்.

இந்தியா, பல தேசிய இன மக்களைக் கொண்ட ஒரு கூட்டாட்சிக்குரிய நாடாகும். இதனை வேறாகப் பலமாநிலங்கள் ஒன்றிணைந்த ஒன்றியம் (Union) என்று தவறாக அரசியல் அமைப்பில் எழுதிவைத்துக் கொண்டு, இங்கு ஒற்றுமை, என்ற பெயராலும், ஒருமைப்பாடு என்னும் பெயராலும், எல்லா இனங்களையும் மொழியால் ஒன்றிணைப்பது, ஒன்றாக்குவது, வலுக் கட்டாய இனக் கொடுமையாகும். அதற்கு, ஒரு மொழியைத் துணையாகக் கொள்வது என்பது அறியாமை ஆகும்.

எனவே இந்தியை மக்களிடையே எல்லா வகையிலும் பரப்புவதும், மேம்பாடுறச் செய்வதும், அதன் பொருட்டு எல்லாருக்கும் பொதுவான அரசுப் பணத்தை ஏராளமாகச் செலவிடுவதும், அதை எல்லா மாநிலங்களிலுமுள்ள எல்லாத் தேசிய இனமக்களையும் படிக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக, அவர்களின் எதிர்ப்புகளையும் பொருட் படுத்தாமல், வேண்டுமென்றே எல்லா முயற்சிகளையும் வன்முறையில் செய்வதும் மிகவும் எதிர்க்க வேண்டிய, தடுத்து நிறுத்த வேண்டிய கொடுமையாகும்.

17. தங்களின் எதிர்க்காலத் திட்டம் என்ன ?

எப்படி யாயினும் இத்தமி ழகத்தை
முப்படி உயர்த்துதல் வேண்டும் —என்
மூச்சதற் குதவுதல் வேண்டும் !
—என்பதே என் வாழ்நாள் கொள்கையாகும்.

மொழியாலும், இனத்தாலும, நாட்டாலும் இத்தமிழகம் தன்னாட்சி பெறுதல் வேண்டும் என்பதே அக் கொள்கையின் பொருளாகும்.

இக் கொள்கையின் அடிப்படையில் மக்களை ஒன்று திரட்டுவதும், அவர்களிடையில் தமிழ்மொழி உணர்வு, இன உணர்வு, நாட்டு விடுதலை உணர்வு ஆகியவற்றைக் கிளர்ந்தெழச் செய்வதும், பின் அவர்களைக் கொண்டு தமிழ் நாட்டு விடுதலைப் போரைத் தொடங்கி, இயன்ற வகையிலும், காலத்திற் கேற்ற

வகையிலும், பற்பல உத்திகளைக் கையாண்டும், தமிழகத்தை வட நாட்டு வணிக—பிராமணியப் பிடிப்பினின்றும் விடுவிக்க வேண்டும் என்பதுமே என் கொள்கையும் திட்டமுமாகும்.

18. விடுதலை மாநாடுகள் வாயிலாகத் தென்மொழி செய்த அருஞ் செயல் என்ன ?

மாநிலத் தன்னாட்சி உரிமை கேட்பதே தவறு, குற்றம், ஏழாண்டுச் சிறைத் தண்டனைக் குரியது என்னும் சூழ்நிலையில், தென்மொழி மூன்று விடுதலை மாநாடுகளை நடத்தியதும், அவற்றால் இரண்டு முறைகள் தொண்டர்கள் பலருடன் சிறை சென்றதுமே அருஞ் செயல்கள் தாமே !

இம்மாநாடுகள் வாயிலாகத், தமிழகத்தைத் தனியே பிரித்துத் தனிநாடாக ஆக்க முயற்சி செய்யும் ஓர் இயக்கம் இங்கு இயக்கிறது என்பதைப் பரவலாக இல்லாமற் போயினும், ஓரளவேனும் மக்களுக்கும் அரசுக்கும் உணர்த்தியதே ஓர் அருஞ்செயல் இல்லையா ?

செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறை மீட்க
நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததெனக்
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே !

—என்ற பாவேந்தர் பாரதிதாசனாரின் முழக்கம் உயிர்பெறச் செய்ய அம்மாநாடுகள் உதவின.

19. தென்மொழிக்குப் பாவாணர் ஆற்றிய தொண்டு யாது ?

சுருக்கமாகவும் உண்மையாகவும் சொல்லவேண்டுமானால், தென்மொழிதான் பாவாணர்க்கும், அவர் கொள்கைக்கும் தொண்டு செய்தது. பாவாணர் தென்மொழி இதழ்க்குச் செய்த தொண்டு, அவ்வப் பொழுதும், சில காலங்களில் தொடர்ந்தும், அதற்குக் கட்டுரைகள் எழுதிக் கொடுத்ததே ஆகும். ஆனால் அவற்றுக்கும் கூட தென்மொழி அவருக்கு அன்பளிப்புகளைத் தந்து உதவியது.

20. தங்களைக் குறை கூறி வரும் கடிதங்களையும் தாங்கள் வெளியிடும் நோக்கங்களைக் கூற முடியுமா ?

ஒருவர்க்கு நிறையாகப் படுவது மற்றவர்க்குக் குறையாகப் படுகிறது. அஃது அவரவர் பார்வையையும் அறிவு நிலையையும் மனநிலையையும் பொறுத்தது.

— காணாதான் காட்டுவான் தான்காணான் ; காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு.

—என்னும் திருக்குறள் ஈண்டு நினைக்கத் தக்கது.

என்னையும் என் கொள்கையையும் தானே சரி என்று மதிப்பிட்டுக் கொள்வதையும், அவற்றின் குறைகளையும் குற்றங்களையும் நானே திரையிட்டு மறைத்துக் கொள்வதையும் நான் விரும்

புவதில்லை. அவை மக்களின் பார்வையில் படுகின்ற தன்மையை நானும் உணர வேண்டும் ; மற்றவர்களும் உணர வேண்டும். சிந்திக்க வேண்டும். அவற்றின் வழி நல்லது தேரும் நடுநிலை உணர்வு பெறவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

மேலும், பொதுவுணர்வு கொண்டு மக்களுக்குத் தொண்டு செய்ய முன் வந்த ஒருவன், தன்னை மக்கள் திறனாய்வு செய்வதையும் விரும்ப வேண்டும். அப்பொழுதுதான் அவன் உண்மையாகவும் நேர்மையாகவும் இயங்க முடியும். அதை மெய்ப்பிக்கவும் முடியும்.

எனவே என்னைக் குறைகூறுவதையும் நான் வரவேற்கிறேன். அது சரியா என்று பிறர் ஆய்வதற்காகவும் நான் மக்கள் முன் வைக்கிறேன். சுட்டப்படும் குறை எதன் அடிப்படையில் கூறப்பெற்றது ; அ'து எவ்வளவில் உண்மை ; அது பற்றிப் பலரும் என்ன கருதுகிறார்கள் என்பதை அறியவும் நான் விரும்புகிறேன். எனவேதான் நேர்மையான முறையில் நல்ல நோக்கத்துடன் எனக்கே தெரிவிக்கப்படும் குறைகளையும் நான் வெளியிடுகிறேன். என்னைப் புறங்கூறித் திரிபவர்கள் இதற்கு மாறானவர்கள். அவர்களிடம் உண்மையில்லை—துணிவில்லை யாகையால் மற்றவர்களிடம் என்னைப் பற்றிக் குறை கூறித் திரிகிறார்கள். அவ்வாறில்லாமல் என்னிடமே என்னைப் பற்றிச் சொல்பவர்களை நான் உண்மையானவர்கள், துணிவானவர்கள் என்று அவர்களை மதிக்கின்ற வகையாலும் அவர்களின் மடல்களை நான் வெளியிடுகின்றேன்.

21. தமிழுக்குத் தொண்டு செய்ய தென்மொழி இதழைத் தோற்றுவித்த பின், தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களைத் தோற்றுவிக்கக் காரணம் என்ன ?

மொழி அடிப்படையிலும் இலக்கிய அடிப்படையிலும் தூய தமிழின் உயர்வை மாணவர்களும் ஆசிரியர்களும், ஓரளவு கற்றவர்களும் உணர வேண்டும் என்பதற்காகத் தென்மொழி தோற்றுவிக்கப் பெற்றது.

அதே போல், சிறுவர்களுக்குத் தூய தமிழ் வழக்கு இளமையிலிருந்தே பயிற்ற வேண்டுமென்பதற்காகவும், நற்பண்பும், நல்லொழுக்கமும் வளர்த்தெடுக்கப் பெற வேண்டும் என்பதற்காகவும், அவர்களுக்கு நல்லறிவும், அறிவியலறிவும், உலகியலறிவும், நல்ல இலக்கிய ஆர்வமும் ஊட்டப் பெற வேண்டுமென்பதற்காகவும் 'தமிழ்ச்சிட்டு' இதழைக் குறைந்த விலையில் 1965-இல் தொடங்கினேன்.

பிறகு நவம்பர் '82 —இல், உலகத் தமிழின முன்னேற்றக் கழகக் கொள்கையிதழாகத் தமிழ் நிலம் தொடங்கப் பெற்றது. இது பொதுமக்களுக்குக்காகத் தொடங்கப் பெற்ற தென்றாலும், ஓரளவு கற்ற மக்களுக்கு விளங்கும் வகையில் தூய தமிழில் கொள்கை விளக்கங்கள், அரசியல் திறனாய்வுகள், உலக நாடுகளின் வரலாறுகள், இயக்கச் செய்திகள், சொற்பொழிவுகள், வேறு சுவையான கொள்கைப் பாடல்கள் ஆகியவற்றைத் தருகிறோம்.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம் ஆகிய மூன்று இதழ்களும் மூன்றுவகைப் பயன் கருதி, மூன்று தரத்து மக்களிடையில் பயன்படுவதற்காகத் தோற்றுவிக்கப் பெற்றன. இவ்வாறு மூன்று நோக்கத்தில் மூன்று கொள்கையிதழ்களை இதற்கு முன் வாணிகப் பயன் கருதாமல் எவரும் நடத்தவில்லை என்பதை உணர வேண்டும்.

22. இன்றைய சூழலில் அரசின் அரவணைப்பிலேயே இதழ்கள் இயங்கும் போது, தென்மொழி மட்டும் நெறிவிலக்காக இயங்கக் காரணம்— ?

அரசின் அரவணைப்பில் இதழ்கள் இயங்குவது அவற்றின் ஊதிய நோக்கத்திற்காகவும், பயன் கருதியதாகவும் தான் இருக்க முடியுமே தவிர, கொள்கை நோக்கிற்காக இருக்கவே முடியாது. அதுவும் இக்கால அரசியல் என்பது வெறும் தந்நலம் கருதியதும், மக்கள் நலம் கருதாததும் ஆகத்தான் நடைபெறுவது என்பது நடுநிலையாளர் அனைவரும் உணர்ந்ததாகும்.

மேலும், இன்றைய நடுவணரசு முதலாளியப் பார்ப்பனியக் கோட்பாடு கொண்டதாகும். அதற்கு இயைபாகவும், மாநில மக்களின் முழு நலம் கருதாத படியாகவுந்தாம் மாநில அரசுகள் இயங்க முடியும். தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழின மேம்பாட்டிற்கும், தமிழ் நாட்டு முன்னேற்றத்திற்கும் உகந்தபடி மாநில அரசு தன் முழு விருப்பத்திற்கும் நோக்கத்திற்கும் இயங்க வியலாத படி மாநில அரசின் அதிகாரங்கள் கட்டுப் படுத்தப் பெற்றுள்ளன.

இந்நிலையில் அரசுடன் இணைந்து போவதென்பது நம் தேவையான கொள்கையை முனை மழுக்கிக் கொள்வதாகவே முடியும். நம் நலன்களையும் வருவாயையும் மட்டுமே கருத்தில் கொண்டு தாம் இயங்குவதானால் மட்டுமே, நாம் அரசின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் கண்களை மூடிக்கொண்டு ஆதரிக்க வேண்டியிருக்கும்.

நம்மைப் பொறுத்தவரையில், நாம் கொண்ட கொள்கை தெளிவானது ; சரியானது ; செய்து முடிக்கப் பெற வேண்டியது. இந்நிலை, இன்றைய நடுவண் அரசுக்கும் சரி, அதன் வழி இயங்கித்தான் ஆக வேண்டும் என்னும் கட்டாய நிலையில் உள்ள இன்றைய மாநில அரசுக்கும் சரி, ஒத்துப் போக முடியாத ஒன்றாகவே இருக்கும். எனவே தான், நாம் நம் தனிப்பட்ட நலன்களுக்காக இல்லாமல் முழுவதும் மொழி நலத்துக்காகவும், இன முன்னேற்றத்துக்காகவும், நாட்டு விடுதலைக்காகவும் இயங்க வேண்டியிருப்பதால், அரசின் அரவணைப்பில் இயங்க முடியாமல் தனித்து இயங்குகிறோம்.

23. தென்மொழி இதழின் ஆசிரியவுரைப் பக்கத்தில் பிளிறும் யானையும், சீறும் அரிமாவின் உருவப் படமும் இடம் பெற்ற தன் நோக்கத்தை அறிந்து கொள்ளலாமா ?

யானை வலிவான, நெகிழ்ச்சியற்ற, உறுதியான நடையைக் கொண்ட பெருமிதமான விலங்கு ; அதுபோல் நாம் நம் கொள்கையில் வலிவும், நெகிழ்ச்சியற்ற தன்மையும், உறுதியும்

நெஞ்சு பொறுக்கு தில்லையே !

தமிழுக்காகத் தமிழக அரசா ? இல்லை என்பதற்கொரு சான்று !

மறைமலையடிகளார் மதிப்பிழந்து போனரா ?

எங்கும் தமிழ் ; எதிலும் தமிழ் ! தஞ்சையில் தமிழுக்கொரு பல்கலைக் கழகம். தமிழ் அறிஞர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் !

(முன் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு ஒரு பெருமிதமான போக்கைக் கொண்டுள்ளோம்— என்பதற்காக யானையின் பெருமிதமான தோற்றத்தையும் ;

அரிமா, கோழைமையற்ற வீறுணர்வுடன், பகையை நோக்கி முழக்கமிட்டுப் பாயக் கூடிய விலங்கு ; அது போல், நாமும் நம் கருத்துகளை கோழைமையற்ற வீறுணர்வுடன் பகையை எதிர்க்கும் நோக்குடன் முழக்கத்துடன் கூறுகிறோம்— என்பதை விளக்க சீறும் அரிமாவின் தோற்றத்தையும் ; தென்மொழியின் இலச்சினைகளாக ஆசிரியவுரைப் பக்கத்தில் அச்சிடுகிறோம்.

இந்த இரு இலச்சினை வடிவங்களும் என் உண்மையான கருத்துகளுக்குப் பொருத்தமாக அமைய வேண்டும் என்பதற்காக, இவ் விரு படங்களையும் நானே வரைந்துள்ளேன் என்பதையும், இவை போல் தென்மொழிக்கும் தொடக்கக் காலத்தில் நானே சில அட்டைப் படங்களையும் வரைந்து வெளியிட்டுள்ளேன் என்பதையும், ஓரளவுக்கு எனக்கு ஓவியப் பயிற்சியும் உண்டு என்பதையும் இங்கு அடக்கத்துடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

24. 'தென்மொழி' பெயர்க் காரணத்தை அறியலாமா ?

தென்நாடு, தென்புலம், தென்திசை, தென்குமரி, தென்மலை, தென்வளி (தென்றல்), தென்னவன் என்பன தமிழ்வழக்குகளைச் சுட்டிய முறைபோல், தென்மொழி என்பது தமிழுக்காகியது. திருவருட்பா வாசிரியர் இராமலிங்க அடிகளாரும் தமிழ்மொழியைத் தென்மொழி என்றே குறித்தார். வடக்கே வழங்கிய மொழிகள் வடமொழிகள் ஆகி, சமசுக்கிருதத்தைச் சிறப்பாக வடமொழி என்னும் சொல் குறித்தது போல், தென்மொழி தமிழையே சிறப்பாகக் குறித்ததால் அப்பெயரையே இவ்விதழுக்கும் இட்டு அழைத்தோம். பாவாணர் கொடுத்த தலைப்பு, இது !

25. இதழின் முகப்பில் இருக்கும் விலங்கு தெறிக்கும் நிலையிலுள்ள மாந்தன் உருவப்படம் பற்றிய தங்கள் கருத்து— ?

அம் மாந்தன் தமிழன். அவனின் கைகளில் அடிமை விலங்கு பூட்டப் பெற்றுள்ளது. அவ் வடிமை நிலை மொழி, இனம், நாடு —என்னும் மூன்று கூறுகளிலும் அமைந்திருக்கின்றன. அவற்றை அவன் தகர்த்தெறிய வேண்டும் என்பதே இவ் விதழின் கொள்கை என்பதை உணர்த்தவே அப்படம் வெளியிடப் பெறுகிறது. இதுவும் இதழின் இலச்சினைகளில் ஒன்றாக, இக்கால் ஆசிரியவுரைப் பக்கத்திலேயே அச்சிடப் பெறுகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

○

என்றெல்லாம் பீற்றிக் கொள்கிறது தமிழக அரசு. ஆனால் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியாளர்களின் முன்னோடியும், தனித்தமிழ் இயக்கத்தின் முதல் தோன்றலுமான, தமிழ் மூதறிஞர் மறைமலை யடிகளின் புதைமேடையைக் கூட சரியாகப் பேணாமல் உள்ளது அரசு. அவர் மறைந்த போது அடக்கம் செய்யப்பட்டுக் கல்லறை யும் கட்டப்பட்டது. ஆனால் இப்போதோ அவரின் கல்லறையே மறைக்கப்பட்டு, இருக்குமிடம் தெரியாமல் உள்ளது. மறைமலை யடிகள் இறப்பைபபற்றி நினைவில்லத்தில் இருந்த பெரியவர் பால கிருட்டிணன் என்பவரிடம் கேட்ட பொழுது, மறைமலையடி களாரை இங்குதான் (நினைவில்லத்தில்) எரியூட்டினார்கள் என்றார் அவர். முழுப்பூசணிக்காயை அப்பட்டமாகச் சோற்றில் மறைத் தார்.

அவருடைய புதைமேடை, பல்லாவரம் உந்து வண்டி நிலையத் திலிருந்து ஒரு படைச்சால் (பர்லாங்) தொலைவில் உள்ள இடுகாட் டில் இருக்கிறது. இப்பொழுது அந்த இடமெல்லாம் ஏழைகள் குடிசைகளைப் போட்டுக் கொண்டுள்ளார்கள். உருக்குலைந்து போன அவர் புதைமேடை இப்பொழுது ஒய்வு நேரப் படுக்கும் திண்ணையாகி விட்டது. அதையொட்டியே ஒரு குடிசை உள்ளது.

இதுபற்றி அங்குள்ள பெரியவர்களை அணுகிய போது இதற் கெல்லாம் காரணம் உள்ளூர், தி.மு.க., அ.தி.மு.க. அரசியல் என் பது தெரிய வந்தது.

சரி, புதை மேடைச் செய்திதான் இப்படிப் போனது என் றால், அவரது நினைவில்லம் அதை விட இழிவாக உள்ளதைப் பார்த்தாலும் நினைத்தாலும் வயிறு பற்றி எரிகிறது. தமிழகஅரசு தமிழ் வளர்க்கும் அரசு என்று தம்பட்டம் அடிக்கப் படுகிறது.

சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரம் என்னும் பகுதியில் ஒரு குறுகிய சந்தில் உள்ள வீட்டில் அடிகளார் வாழ்ந்து வந்தார். அவர் மறைந்த பின் 1962-இல், அப்பொழுதைய தமிழக முதல்வ ராக விருந்த பக்தவத்சலம் அவர்கள் அந்த வீட்டை நினைவில்ல மாக்கித் திறந்து வைத்தாராம். அவர் நினைவில்லத்தில், அடிக ளார் தம் வாழ்நாளில் தொகுத்து வைத்த அரிய நூல்கள் பலவும் எழுதி வைத்திருந்த கையெழுத்துப் படிகளும், அங்கு வைத்துப் பாதுகாக்கப் பெற்று வந்தன.

ஐயகோ ! இப்பொழுது அவை, தக்க பராமரிப்பின்றி, பாது காப்பின்றிச் செல்லரித்துக் கொண்டிருக்கின்றன. அவர் வைத் திருந்திருந்த பெரிய அளவில் உள்ள தமிழறிஞர்களின் படங்கள் அவரின் படுக்கை மேல், அடுக்கி வைக்கப் பெற்று, அழுக்கேறிக் கிடக்கின்றன.

நினைவில்லம் முழுவதும் தூசியும் தும்பும் மண்டி வீட்டையே மூடி வருகின்றன. ஒட்டடைகள் வீடு முழுவதும் பரவி, வெள வால் மண்டிய 'பேய்' மண்டபம் போல் வீடு காட்சியளிக்கின் றது. அனைத்துக்கும் மேலாக நினைவில்லம் விளக்குகளே இல்லா மல் இருள் மண்டிக் கிடக்கிறது.

அவர் பயன்படுத்திய, அழகழகாக எழுதிவைத்த அரிய நாட்குறிப்புகள், பேணுவாரின்றி, அழுக்கேறிப் பாசம் படர்ந்து, குப்பைகளுள் புதையுண்டு கிடக்கின்றன. யாரும் அவற்றைச்' சீண்டுவாரில்லை ; பாதுகாப்பாருமில்லை. யார் வேண்டுமானாலும் அவற்றை எடுத்துக் கொண்டு போய் விடலாம்.

அந்த நாட்குறிப்புகள் அனைத்தும் தமிழக இலக்கிய வரலாற்றுக்கு உதவும் ஒப்பற்ற கலைச் சான்றுகளாகும் ; வரலாற்றுக் கருவூலங்களாகும். எடுத்துக் காட்டாக, வடலூர் வள்ளலார் மறைந்த செய்தியைப் பற்றி அடிப்படையான செய்திகள், சான்றுகள் எங்குமே கிடைக்காது. ஆனால் அடிகளாரின் நாட்குறிப்பில் அவை காணக் கிடைக்கின்றன. இவற்றைப் பார்ப்பதற்காக மேற்கு செருமனியிலிருந்து தமிழ் ஆராய்ச்சி அறிஞர் ஒருவர் வந்து அவற்றை எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது. ஆனால், அதன் அருமை பெருமைகளை நாம் உணர முடியாமல் உள்ளது.

அடிகளார் சேர்த்து வைத்த விலைமதிப்பற்ற நூல்கள் அனைத்தும் முறையாக வைக்கப் படவில்லை. சரியாகப் பாதுகாக்கப் படவும் இல்லை. அது போலவே, இன்று கிடைப்பதற்கும் அரிதான, ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கும் முந்தைய புகைப்படங்கள் அனைத்தும், பாழடைந்து, ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப் பட்டுள்ளன. பொழுது போக்காகப் பழைய வரலாற்றுக் கலைப் பொருள்களைத் திரட்டும் வெளிநாட்டினர் இவற்றைப் பார்த்தால் இலக்கக் கணக்கான உருபா கொடுத்து அவற்றை எடுத்துச் செல்லவும் தயங்க மாட்டார்கள்.

அடிகளாரின் நினைவில்லமே அவருடைய பழைய நினைவுகளைக் குழிதோண்டிப் புதைத்து மூடிவிடும் ஓர் எடுத்துக் காட்டாக உள்ளது. ஏதோ பெயருக்கு அதை வைத்துள்ளனர் என்றே மதிப்பிட முடிகிறது.

இன்னும் சற்றுக் கீழிறங்கி, இழிவுணர்ச்சியுடன் குறிப்பிட வேண்டுமானால், மறைமலையடிகளாரின் நினைவில்லம் இரவு நேரத் தங்கல் மனையாகவும் பயன் படுத்தப்பட்டு வருகிறது. வெளியூர் இளைஞர் சிலர் இரவில் சிறிய வாடகை கொடுத்துவிட்டு அங்குத் தங்குவதாகவும் தெரிய வருகிறது.

அங்குள்ள சமண சங்கப் பொறுப்பாளர் இந்நினைவில்லத்தின் தாழ்ச்சி நிலைகளைப் பற்றிக் கூறுகையில், 'சொல்லுக்குச் சொல் தமிழைப் பற்றிப் பேசும் இவர்கள். (மக்களைப் பற்றிச் சொல்கிறாரோ, அரசைப் பற்றிக் குறிப்பிடுகிறாரோ தெரியவில்லை. இரு தரப்பினருக்குமே இது பொருந்தும்.) இந் நினைவில்லத்தைப் பாழடைந்த மனையாக மாற்றி விட்டார்கள். மதுரைத் திருமலை நாயக்கர் வளமனையின் சுவரைப் பற்றி, அதன் அழகைப் பற்றி வண்ணிக்கிறோம். அது போல் அடிகளாரின் வீட்டுத்தூண்கள் முட்டையும் சுண்ணும்பும் கலந்த சாந்தால் உருவாக்கப் பட்டது, அது போன்ற ஒரு தூணை இப்போது பார்க்க முடியாது. அவர்

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம் பார்க்க.)

மதத்தின் பெயராலே ஏற்படுகின்ற இறைக் கோட்பாடுகள் தேவையில்லாதன. அவை சிக்கலை ஏற்படுத்த முன்னேற்றத்திற்கு இன்னலேற்றிட வழிசெய்கின்றன. முன்னோர்களைப் பற்றியும், கண்ட புராணங்களைப் பற்றியும் பேசிப் பொருளில்லாதாக்குவதை விட, இக்கால இளைஞர்களின் புரட்சிக்கு வித்திடக் கூடிய மனப்பக்குவத்தைத் தந்திடும் அளவிற்குக் கொள்கைகளை வகுத்துத் தந்து செயல்படுத்தும் முனைப்பிற்கு அழைத்திட வேண்டும்.

"கொய்யாக்கனி" நாடகம் 22 தொடராக வெளிவந்து தூய்மையான தமிழைச் சுவைப்பதற்கும், வாய்மையான கருத்தை நல்குவதற்கும், பிடிப்பான போக்கை ஏற்பதற்கும், குமுகவியல் நடைமுறையில் காணும் சிக்கல் சீரழிவுகள், வறுமை இந்நிலைகளை விளக்கி, படிக்குந்தோறும் தமிழ்மீது பற்றினை ஏற்றி, உணர்வனைத்தும் இனநலத்தையும் உயரிய சிந்தனையையும் வழங்கிய நாடகமாக அமைக்கப்பட்டிருந்தது.

நாடகமாக ஆக்கிய **அதியமான்** அவர்களுக்குத் தமிழினம் பெரும் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றது. ஆம், அதேநேரத்தில் சுவை குன்றாத, கருத்து மாறாத அளவில் படிக்கும் போதே பண்பை ஊட்டக் கூடியதாக, அதற்கும் மேலாக ஆழப் பதிந்திடும் தன்மையதாக நாடமாக்கித் தூய தமிழ்ப்பணி ஆற்றி இருக்கிறார்.

அன்புடன், பாவலர். **இராவணதாசன்** சென்னை-23

O: 1261: பேரன்புடைய பாவலரேறு, தமிழெழுத்துச் சீர்திருத்தம் தேவைதானா என்ற என் கட்டுரையை ***முழுமையாகத் 'தென்மொழி'*** வெளியிட்டிருப்பது அறிந்து நன்றி யுரைகின்றேன்.

மலேசியா ஆறுவது உலகத் தமிழ் மாநாட்டில் கருத்தரங்கில் என் கட்டுரை உறழ்வு பெற்றது. எழுத்துத் திருத்தம் தேவையில்லை என்பதற்கு ஆர்வமான இசைவு இருந்தது. அன்பன்,

வ. சுப மாணிக்கம், காரைக்குடி.

O: 1262: அன்புள்ள ஐயா அவர்களுக்கு, வணக்கம் ......ஓய்வு நேரங்களில் **தென்மொழித்** தொகுப்புகளைப் படிக்கிறேன். மன அழுத்தம் ஏற்படுகிறது. எவ்வளவு அரிய கருத்துகளைத் தாங்கிக் கடந்த பல ஆண்டுகளாக வெளி வந்துள்ளது. தன்மானம், ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றைப் பேணி மற்றவர்களினும் **தென்மொழி** அன்பர்கள் தனித்து விளங்குவார்கள் என்பது உறுதி.

இந்தக் குமுகாயத்தில் இந்தப் பண்பியல்புகளுடன் வாழ, மக்கள் எங்கு விடுகிறார்கள்? குறிப்பாக அரசுப்பணியில் இருந்தால் கையூட்டு, பல்லிளிப்பு, அரசியல் காரர்களுக்கு அடிபணிவது இவற்றுடன்தானே வாழ விடுகிறார்கள். நேர்மை, ஒழுக்கம், தன்மானம் கொண்டு இருந்தால், அரசியல்காரர்களாலும், ஆளுங்கட்சிக் காரர்களாலும் அடிக்கடி தொல்லைதானே மிஞ்சுகிறது.

தாங்கள் இம் முறை வெளிவந்துள்ள **தமிழ்ச்சிட்டு** இதழில் எழுதியுள்ள **"நாணம்-வெட்கம்"** கட்டுரை எவ்வளவு அரியதொரு கருத்துப் பெட்டகம். எந்த மாணவன் அவற்றைப் படிக்கிறான்? பெரியவர்களும் அப்படியே. விரைவில் **திருக்குறள் *'மெய்ப்பொருளுரை'*** எழுதி முடிக்க வேண்டும் என வேண்டி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். தங்கள் அன்பு— **அ. விசுவநாதன்,** ஆத்தூர். 2

O: 1263: வணக்கத்துக்குரிய அய்யா அவர்களுக்கு!

நான் தீடீரென்று புறப்பட்டு டெல்லி வரும் சூழ்நிலை ஏற்பட்டு